தமி. நேசன்

V. 6 NO. 25 22 June 1933.

3L
m211, N28 KN
N 33. 6. 25
189183

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணு மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6] 1933 ஹு ஜூன் மீ 22உ [No. 25

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 481
2. தமிழ்ப் பாடம்
நளவெண்பா-கலிநீங்குகாண்டம் 483
3. நம்மாழ்வார் வைபவம் (5-ம் பத்து, 3-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 485
4. பொதிகை நிகண்டு (நகரவர்க்கம்)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 487
5. மதிப்புரை—யாழ்ப்பாணச் சரித்திரம் 488
6. யாப்பிலக்கணம் (ஆசிரியத் துறை, கலித்துறை, வஞ்சித்துறை)
வித்துவான் M. V. வேணுகோபாலப் பிள்ளை 490
7. கலித்தொகை (பாலைக்கலி, 13, 14)
T. A. கனகசபாபதி முதலியார் 491
8. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலம், B.A.B.L. 492
9. அட்டவணை 497

30 SEP 1933
18918
MADRAS

க லா நி லய

இவ்வைந்தாண்டுகளில் குறித்தகாலந் தாழாமல் வாரந்தோறும் வெளிவந்த நம் கலாநிலயம் இவ் விரண்டு மூன்று மாதங்களிற் சில இதழ்கள் காலங்கடந்து வர நேர்ந்ததன் காரணத்தை நமது நண்பர்கள் அறியாதிரார். இது போன்ற ஒரு பத்திரிகை அதனை யியற்றுவோர்க்கு இலாபம் தருமென்றேனும், தரவேண்டுமென்றேனும் ஒருபோதும் எதிர்பார்த்ததில்லை. எங்களால் தாங்கவல்ல வரையில் நஷ்டத்தைத் தாங்கியே இப்பத்திரிகை நடத்துவதெனத் துணிந்து ஆரம்பித்தோம். அவ்வாறே இவ்வைந்து ஆண்டுகளும் நடத்தியும் வந்தோம். எனினும் இவ் வைந்து ஆண்டுகளாகச் சேர்ந்துகொண்டு வந்த நஷ்டத்தின் தொகை, எங்கள் சக்தியை அதிகமுங் கடந்து நிற்கின்றதாதலின், இந்த நிலையிலேயே இப்பத்திரிகையை இன்னும் நடத்துவதற்கு ஆற்றாமல் இருக்கின்றோம். ஆயுள் சந்தா நன்கொடை முதலியவகைகளில் பிறருடைய உதவியைப் பெறும் நினைவு எங்களுக்கு இல்லை என்பதும் நமது நண்பர்கள் அறிவார்.

எனின், இதுகாறும் அடைந்த நஷ்டத்திற்கு ஒருவாறு ஈடு செய்துகொண்டு, இனி இத்தகைய நஷ்டம் குவியாமல் காத்துக்கொள்ளச் சில ஏற்பாடுகள் செய்துமுடிக்கக் கடவுள் அருளை முன்னிட்டு முயன்று வருகின்றோம். 1928, 1930, 1931, 1932 வால்யூம்கள் எங்கள் கையிருப்பா யிருப்பவைகள் விரைவில் விற்கப்பெறு[illegible]ய நஷ்டத்தில் ஒரு பகுதி ஈடுசெய்யப்பெற்றதாகும். மேலினி நடக்கும் நஷ்டம் குறைவது புதிதாகச் சேர்கின்ற சந்தா நண்பர்களின் தொகையைப் பொருந்தியதென்பது கூற வேண்டியதில்லை. எங்கள் இவ்விரு நோக்கமுங் கைகூடுவதற்குக் கலாநிலயத்தின்பால் உண்மை அன்புடைய நண்பர்கள் உடனே முன்வந்து உதவி செய்யத் தாழமாட்டார்கள் என நம்புகின்றோம்.

கலாநிலயத்தை நிறுத்திவிடும் நினைவு எங்களுக்கு இல்லை. அதனை நடத்துவதற்குநாங்கள் கடவுளருளை முன்னிட்டுச் செய்து வருகின்ற முயற்சி சிறியதன்று. இம்முயற்சிகளின் பயனை இப்பொழுதிருக்கும் நிலையை நோக்குமிடத்து, இவ்விடுக்கண்களை விரைவிற் கடந்து கலாநிலயம் நடைபெறவேண்டுமென்பதே கடவுளின் சித்தம்போல் தோன்றுகின்றது. எமது முயற்சிகள் விரைவிற் கைகூடிவரும் என்று எதிர்பார்க்கின்றோம். அவை கைகூடியதும் உடனே மீண்டுந் துவக்கி, இவ்வருடத்தில் வர வேண்டியிருக்கின்ற எஞ்சிய இதழ்கள் இருபத்தைந்தையும், வாரம் இரண்டிதழ்கள் வீதம் வெளிக்கொணர்ந்து இவ்வருடத்திற்குள்ளேயே இவ் வாறுவது வால்யூமை நேர்செய்து முடிக்கவல்லவர்களாவோம் எனக் கருதுகின்றோம். இதற்கிடையில் ஆங்காங்குள்ள எமது நண்பர்கள் சிற்சில சந்தாநண்பர்களை எமக்குச் சேர்த்துத்தர விரைந்து முயல மனங்

கொள்வார்களாயின், அப்பேருதவி, கலாநிலயத்தின் அடுத்தவிதழ் வெளிவரும் நாளை விரைவுபடுத்தியதாகும். எம் பத்திரிகையைப் பெறுவதற்கு இசைகின்ற புதிய நண்பர்களின் பேரையும் விலாசத்தையும் உடனுக்குடனே எங்களுக் கெழுதினால், கலாநிலயம் மீண்டும் வெளிவரத் துவக்கியதும், அவர்களுக்கு வி.பி. அனுப்பிச் சந்தாத் தொகையைப் பெற்றுக்கொள்வோம். நாங்கள் வேண்டிக் கொள்கின்றோம் என்னும் எண்ணத்தாலன்றி, கலாநிலயத்தின்பாலுள்ள நற்கருத்தினால் இவ்வுதவியைச் செய்ய இசைபவர்களுக்குச் சில சந்தாநண்பர்களைச் சேர்த்துத் தரல் அருமையாகாது.

கலாநிலயத்தின் நோக்கமும் அந்நோக்கத்தை அது நிறைவேற்றுகின்ற வகைகளும் எத்தகையன என்பதை இச்செவ்வியில் நமது நண்பர்களுக்குச் சிறிது நினைவுபடுத்திக் கொடுப்பது முறைமையாகலாம். நல்வாழ்வு வாழ்ந்து அதனால் உண்மை யின்பம் பெருகி உயிர்கள் உய்வதற்குரிய நெறிகள் இவை யிவை யென்று இவ்வுலகத்தின்கண் அவ்வப்பொழுது தோன்றி விளங்கிய பெரியோர் பகர்ந்துள மொழிகளை எடுத்தெழுதியும் விளக்கித் தந்தும், மக்கள் அவைகளின் மெய்ப்பொருளை யுணர்ந்து அவைகளைச் சார்ந்தொழுக வேண்டுமென்னும் ஆர்வம் உடையவராதற் குரியவைகளைச் செய்வதல்லால் கலாநிலயத்திற்கு வேறோர் நோக்கமில்லை என்பது வெளிப்படை. வாழ்வாங்கு வாழாத வறுமை நீங்குமாயின், தேகசுகம் பொருள்நிலை ஆசாரவகை அரசியல் முறை முதலிய நலங்கள் தாமே நேர்மையடையும் என்றும், மனமுறக் கனிந்து இனிது பழுக்க வேண்டிய அந்நல்வாழ்வு கைகூடாவரையில், மற்றத் துறைகளிற் செய்யும் முயற்சிகளெல்லாம் பயன்படாமலொழிவதன்றித் துன்பமும் துயரமும் பகையும் பாதகங்களுமே மேன்மேலும் வளருமென்றும் அறிவாலும் கல்வியாலும் கடவுட் செல்வத்தாலும் சான்ற பெரியோர்கள் வழங்கியுள உண்மைகளை எடுத்துக்கூறி மக்களமனத்தை அம்மொழிகளுக்குரிய நெறியில் செலுத்த முயல்வதல்லால் எம்மைப்போன்றவர் தீதிலா வகை ஆற்றவல்ல கடமையும் வேறிலது. இக்கடமையைச் செலுத்துங்கால், எங்கள் கொள்கை இது, எங்கள் அறிவால் வகுத்துக் காட்டும் முறையிது, என்றென்று எங்கள் பொறுப்பில் எதனையும் வற்புறுத்தப் புகாமல், ஐயமற்ற காட்சியால் தெளிந்து அறிவின் சிகரங்கள் என்றோங்கித் தத்துவ நிலையைத் தொட்டவர்கள் என்றென்று உலகமனைத்தும் ஒருமனப்பட்டுக் கொண்டாடுகின்ற உத்தமர் தம் மெய்ம்மொழியைச் சார்ந்தே நாம் பேசுவன யாவும் பேசி வருகின்ற செம்மையை இக் கலாநிலயத்தை ஓதுவோர் கருத்துட் கொள்ளாமல் இருக்கமாட்டார். திருவள்ளுவர் கம்பர் அனைய தமிழ்க் கவிகளோடு, எமர்ஸன், வால்ட் விட்மன், கார்லைல், மாத்யூ ஆர்னல்ட், ரஸ்க்கின், டென்னிஸன், ஷேக்ஸ்பியர் அனைய ஆங்கிலப் புலமையோரும், ஸாக்ரடீஸ், பிளேட்டோ, அக்கீடியஸ், உமார், ஷாபன்ஹார், மேடர்லிங்க், காண்ட், லிப்னீட்ஸ், டேகார்ட், ஸ்பைனோஸா, ஹெகெல், அனைய பிறமொழி வித்தகர்களும், புத்தர் இயேசுகிறிஸ்து போன்ற கடவுட் தோற்றத்தினர்களும், வாழ்க்கையின் பண்பையும் பயனையும் பற்றி உள்ள முருக முருக உரைத்த நன்மொழிகள் நம் இதழ்தோறும் திகழ்கின்ற தன்மையைக் கண்டு வருகின்ற நண்பர்களுக்கு நாம் வேறொன்றும் விளம்ப வேண்டா.

நல்லோர் உரைகளை நினைவுபடுத்தி விளக்கித் தருவதுமட்டும் போதாதென்பதை யறிவோம். ஓதுவோர் மனத்தில் அத் திப்பிய மொழிகள் ஊன்றி வளர்ந்து நலங்கனிந்த வாழ்க்கையாகப் பழுத்தல் வேண்டும். இப்பயன் நேர்வதற்கு மனமானது பண்பட்டுப் பதமடைந்திருக்க வேண்டியது அவசியம். மனம் பண்பட்டுப் பதமடையும்படி செய்யுந் தரம் கலைபொதிந்த காவியங்களுக்கன்றி வேறெதெற்கும் இல்லை. ஆதலாற்றான் நம் கலாநிலயத்தில் காவியச் சுவை கைவருதற்குரிய கட்டுரைகளே பெரும்பாலும் வரைந்து வரலாகின்றன. இலக்கியங்களைப்பற்றி அதிகம் ஒன்றும் எழுதாமல், இலக்கியங்களையும் அவ்விலக்கியங்களுக்குள் கிடக்கின்ற நயங்களையுமே கலாநிலயம் திரட்டித்தருவதன் நோக்கம் இதுதான். மொழியையும் சரித்திர ஆராய்ச்சியையுஞ் சாராமல், இலக்கியப் பயிற்சியால் எழுகின்ற கலையுணர்வினால் மனிதமனம் பண்பும் பதமும் அடையுமென்பது சான்றோர் காட்சியில் தெளிந்தனராதலின், இலக்கியத்தின் அகத்தினின்றெழுகின்ற அழகினை ஆய்ந்தறிந்துகொள்ளுவதற்கு இயன்றனவாகவே நம் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன.

இதுவுமன்றி அவசியமாவது இன்னுமொன்றுளது. நம் கட்டுரைகளை ஓதிப் பொருள்தெரிந்து கொள்வதற்குப் போதிய தமிழ்ப் பயிற்சி இல்லாதவர்கள்பால் இலக்கியச் சுவையின் இனிய நினைவு எழுதல்பொருட்டு முதலில் தமிழ்மொழியின் தன்மையை அன்னவர்க்கு ஓரளவு பயிற்றுவிக்க வேண்டியிருக்கின்றது. இவ்வகையில் நம் கலாநிலயத்தில் வரும், தமிழ்ப் பாடங்களும், இலக்கணப் பாகங்களும் செய்யும் உதவி சிறியதன்று. எமக்குத் தெரிந்தே எத்தனையோ பலர் அதன் மூலமாகத் தமிழிலக்கியங்களைத் தாங்களே படித்து அறிந்துகொள்ளக் கூடியவர்களாயினர்: எமக்குத் தெரியாமல் பலர் இருத்தலுங் கூடும்.

இவ்வண்ணம், தமிழைப் பயிற்றுவிக்க வேண்டிய இடத்துப் பயிற்றுவித்தும், இலக்கியங்களின்பால் சுவையை உண்டாக்கியும், அச்சுவையுடையோர்க்கு நம் இதழ்களில் வரும் கட்டுரைகளால் இன்பத்தை யளித்தும், மனதினைப் பண்புற வைத்து, அதன்கண், ஆருயிர்க்கு உறுதிபயக்கும் ஆன்றோர் மொழிகளை விதைத்து, வாழ்க்கை யென்னும் பசும்பயிர் வளர்த்து இன்பக்கனி பழுப்பதற்கு ஆதாரமானவைகளைச் செய்வதே தன் கருமமாகக் கொண்டுள்ள கலாநிலயம் இறைவனுடைய சித்தத்திற்கு எள்ளளவும் மாறும்வகை யில்லையாதலின், அதன் தற்கால இடுக்கண் விரைவிற் றீர்ந்து அக்கடவுளின் சித்தத்தை இடையூறின்றி நடத்திவைக்கக் கூடியதாகும் என்னும் நம்பிக்கை எமக்கு நனியுளது. காலிக்குப் பின்சென்ற கண்ணபிரான், சாதுக்களே தன் சித்தத்திற் கிசைந்தவர்கள் என்பதை நன்கு காட்டினார். எல்லாவகையினும், நம்மை முழுமையும் கடவுளுக்கு முறைசெய்துவிட்டுச் சாதுக்களாய் வாழ்கின்ற வாழ்க்கையே சீரிதென்று அதன்பால் மனிதர் உள்ளத்தை உய்க்கின்றதோர் காரியம், செயற்கரியதாயினும், இடுக்கணழிந்து செய்யாமற் போக விட்டுவிடுவதற் குரியதன்று. இப்பேருலகத்தில் ஒரு சிலர் நினைவையேனும் இக் கலாநிலயம் ஈசன் சித்தத்திற்கு இசையச் செய்து, அவர்தாம் மற்றவர்கள் நினைவையும் இசையும்படி செய்யவேண்டுமென்னும் ஆர்வமுடையவர்களாகும்படி புரியுமாயின் எடுத்த காரியத்தை இது தொடுத்து முடித்தது என்னல் வேண்டும். இதனில் வெற்றி தோல்வி என்பதில்லை. செய்த அளவு செய்யப்பட்ட காரியம் நிற்கின்றது. "என் சித்தத்தை நடத்திவைப்பதில் உனக்குத் தோல்வி என்பதில்லை. மற்று, ஏதோ தோற்றதாக நீ மயங்கினாலும், மைந்த, நன்று, அத்தோல்வியையே எனக்குக் கையுறையாகக் கொண்டு வா" என்று அருட்[illegible] கட்டளை[illegible] கூர்கின்றார்.

தமிழ்ப் பாடம் 75.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[468-வது பக்கத் தொடர்ச்சி]

முன் தன்னை வஞ்சனையால் வென்றவப் புஷ்கரனை நளன் இப்பொழுது மறுசூதில் வென்று வளநாடும் அரசும் பெற்று மாவிந்தநகரிற்குள் எய்தியதும், இவ்வாறு மீண்டுவரும் தம் அரசனைக் காண நிடதத்தார் உவகை அடைந்ததைச் சொல்வதோடு, இந்நள வெண்பா என்னும் நூல் ஆசிகூறிமுடிவடைகின்றது.

ஏனை முடிவேந்த ரெத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—ஆனபுகழ்ப்
பொன்னகர மெய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன். 92.

பதவுரை

ஏனை - மற்ற,
முடி - கிரீடங்களை தரித்த
வேந்தர் - அரசர்
எ - எல்லா
திசையும் - பக்கங்களிலும்
போற்று - துதியை
இசைப்ப - சொல்லவும்,
சேனை - சைனியங்கள்
புடை - பக்கத்தில்
சூழ - சூழவும்,
தேர் - தேரில்
ஏறி - ஏறி
ஆன - பொருந்திய
புகழ் - புகழையுடைய
பொன் - பொன்னால் ஆகிய
நகர் - அமராவதி நகரத்தை
எய்தும் - அடையும்
புரந்தரனைப்போல் - இந்திரனைப்போல
பொலிந்து - விளங்கி
நளன் - நளவேந்தன்
நல் - நல்ல
நகரம் - மாவிந்த நகரத்தில்
புக்கான் - சென்று சேர்ந்தான்.

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதொடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர். 93.

பதவுரை

பார் - தனது இராச்சியத்தை
பெற்று - அடைந்து
மாதோடு - தமயந்திதோடு
வர - வருவதை
கண்ட - பார்த்த
மா - பெருமை தங்கிய
நகருக்கு - நகர ஜனங்களுக்கு,
கார் - மேகம்
பெற்ற - வரக்கண்ட
தோகையோ - மயிலையோ,
கண் - இழந்திருந்த கண்களை
பெற்ற - மீண்டும் அடைந்த
வாள் - ஒளிபொருந்திய
முகமோ - முகத்தையோ,
நீர் - நீரை
பெற்று - பெற்று
உயர்ந்த - நிமிர்ந்த
நிறை - நிறைவுடைய
புலமோ - வயலிலுள்ள பயிரையோ,
ஏதோ - மற்ற எதனைத்தான்
எதிர் - நிகராக
உரைப்பேன் - சொல்லுவேன்.

30 [illegible] 1933 MADRAS

விரிவுரை:—தேர்மேல் தன் மனைவியோடு மீண்டும் தம் அரசனாவதற்கு வந்த நளனைக் கண்டவுடன் அந்நகர மக்கள் கொண்ட கிளர்ச்சிக்கு 'உவமை எதனைக் கூறுவேன்' என்று தெரியாமல் திகைப்பது யாரோ வெனும் சந்தேகத்திற்கு இங்குச் சிறி திடமிருக்கின்றது. இந்நூலின் முதலிலுள்ள பதினொன்றுசெய்யுள்களைப் பாடத்திற் கெடுத்துக்கொள்ளாமல் விட்டுவிட்டோம். அச்செய்யுள்களில் இந்நளனது கதைக்குத் தோற்றுவாய் இருக்கின்றது. சூதினால்யாவும் இழந்து வனத்திலிருந்த தருமராசனை வேதவியாஸ முனிவர் வந்து கண்டனர். அவரிடத்தில் தருமன் தன் குறைகளைக் கூறினன் என்பதை அச்செய்யுள்கள் குறிக்கின்றன. அவைகளை இப்பொழுது பார்ப்போம்.

பேரரசு மெங்கள் பெருந்திருவுங் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானஞ் சேர்தற்குக்—காரணந்தான்
யாதோவப்பாவென்று னென்றுந்தன் வெண்குடைக்
கீழ்த்தீதோவப் பார்காத்த சேய்.

பொழிப்புரை:—தன் வெண்மையாகி குடையின் கீழ், தீமை தங்காமல் ஒழியும்படி பூமியைக் காத்த தருமபுத்திரன், "என் தந்தையே, எங்கள் பெரிய இராச்சியத்தையும் செல்வத்தையும் கைவிட்டு, சேர்வதற்கு அருமையான இந்தக் கொடிய கானகத்தைச் சேர்வதற்கு என்ன காரணமோ" என்றான்.

இதனைக்கேட்ட வியாஸமுனிவர், அவனைத்தேற்றுவாராய், 'சூதாடித் துன்பமடைந்தவன் நீ ஒருவனே அல்லன்; மன்னர்களுக்கு இது இயல்பாகி இருப்பதுபோல் தோன்றுகின்றது. ஒருவருஞ் செய்திராத ஒரு தீமையை நீயே செய்தாய் என்று எண்ணி மிக வருந்தாதே' என்று கூறினார் என்பதைக் கவி பின் செய்யுளில் குறிக்கின்றார்.

கேடில் விழுச்செல்வங் கேடெய்து சூதாடல்
ஏடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண்—வாடிக்
கலங்கலைநீ யென்றுரைத்தான் காமருவு நாடற்
கிலங்கலைநூன் மார்ப னெடுத்து.

பொழிப்புரை:—"கெடுதல் இல்லாத சிறந்த செல்வமும் கெடும்படி செய்கின்ற சூதாட்டத்தை ஆடுவது, இதழ்விரிந்த மலர்மாலையை அணிந்த அரசர்களுக்கு இயல்பாக இருக்கின்றது. ஆகையால் நீ மனம் வாடிக் கலங்காதே', என்று சோலைகள்சூழ்ந்த குருநாட்டரசனாகிய தருமனுக்குப், பிரகாசத்துடன் புரள்கின்ற பூ

ணூலணிந்த மார்பையுடைய வியாஸமுனிவர் எடுத்துரைத்தார்.

இவ்வாறு முனிவர் கூறிடத் தருமன் தானன்றி வேறும் சில அரசர் சூதினால் அழிந்ததுண்டோவென ஆச்சரியமடைந்து வினவியதை அடுத்த செய்யுள் கூறுகின்றது.

கண்ணிழந்து மாயக் கவறுருடிக் காவலர்தா
மண்ணிழந்து போந்துவன நண்ணி—விண்ணிழந்த
மின்போலு நூன்மார்பா மேதினியில் வேறுண்டோ
என்போ லுழந்தா ரிடர்.

பொழிப்புரை:—"மேகத்திலிருந்து இறங்கிய மின்னலைப்போன்ற பூணூலை அணிந்த மார்பை உடையவனே, குருடர்களைப்போல் அதன் தீமையைப் பாராமல் வஞ்சனையாகிய சூதாடி நாட்டை யிழந்து காட்டை அடைந்து என்னைப்போலவே வருத்தமெய்திய அரசர்கள் என்னைத்தவிர வேறு இருக்கின்றனரோ?" என்றான் தருமன்.

இவ்வாறு கேட்ட தருமனுக்கு வேதவியாஸர் நளனுடைய கதையை எடுத்துக் கூறினார் என்பதைக் கவி அடுத்த செய்யுளில் செப்புகின்றார்:—

சேமவேன் மன்னனுக்குச் செப்புவான் செந்தனிக்
கோமவேற் காளை நளனென்பான்—யாமத் [கோ
தொலியாழி வைய மொருங்கிழப்பப் பண்டு
கலியால் விளைந்த கதை.

பொழிப்புரை:—காவலைச் செய்கின்ற வேலையுடைய தருமராஜனுக்கு—ஒப்பற்ற செங்கோலையும், அச்சத்தைத் தருகின்ற வேலையும் உடைய நளன் என்று சொல்லப்படுபவன், இரவில் மிகுதியும் ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட நாட்டினை முன் முழுவதும் இழக்கும்படி கலியினால் நேர்ந்த கதையை (வியாஸர்) சொன்னார்.

இனி இதன்மேல் 'காமர் கயல்புரள' என்று நிடத நாட்டின்சிறப்பைச் சொல்கின்றசெய்யுளோடு அந்தக் கதையும் ஆரம்பமாகின்றது. இப்படிச் செய்யுள்கள் தொடர்கின்ற அமைப்பைப்பார்க்கும்பொழுது, மேல் கூறப்படுகின்ற இக்கதை வேதவியாஸருடைய வாக்காகவே நிகழ்வதுபோல் தோன்றுகின்றது. நளனுடைய கதையை அம்முனிவர் தருமனுக்கு என்னவாறு உரைத்தாரோ அப்படியே புகழேந்தி,முனிவருடைய மொழிகளாகவே கருதி அமைத்திருப்பாரானால், 'காமர் கயல்புரளக் காவி முகைநெகிழ" என்ற தொடக்கத்தையுடைய அந்தச் சுயம்வர காண்டச் செய்யுள்முதல், "ஏதோ வுரைப்பன் எதிர்" என்று முடிகின்ற இந்தக் கலிநீங்கு காண்டத்தின் 93 வது செய்யுள் ஈறாக இடையில் வந்த 402 செய்யுள்களும் கவிக்கூற்றாக இருத்தல் இயலாது.அவை யாவும் வேதவியாஸரின் மொழிகளாகும். அவ்வாறு ஆகுமானால், "ஏதோ உரைப்பன் எதிர்" என இங்கு வியந்தவர் புகழேந்திப் புலவர் அல்லர்; வியாஸமுனிவரே ஆதல் வேண்டும். அடுத்த செய்யுளும்இக்கருத்திற்கு ஆதாரமாயிருப்பதுபோல் தோன்றினாலும், அதனிலும் சந்தேகம் உண்டு.

வென்றி நிடதத்தார் வேந்தன் சரிதையீ
தென்றுரைத்து வேத வியன்முனிவன்-நன்றிபுனை
மன்னு பருவரலை மாற்றுதியென் றாசிமொழி
பன்னு நடந்திட்டான் பண்டு. 94.

பொழிப்புரை:—வேதங்களின் தன்மையை உணர்ந்த முனிவர்,'வெற்றி பொருந்திய நிடததேசத்தவர்க்கு அரசனாகிய நளனுடைய சரித்திரம் இது ஆகும்" என்று தருமபுத்திரனுக்கு உரைத்து, "நற்குணங்கள் வாய்ந்த அரசனே, உன் மனவருத்தத்தை நீக்கிவிடு" என்று அவனுக்கு ஆசிகள் சொல்லிவிட்டு அகன்றனர்.

விரிவுரை:—"வென்றிநிடதத்தார்வேந்தன் சரிதை ஈது" என்ற சொற்கள் இங்கு முனிவர்தம் மொழிகளாயிருக்கலாம்; அல்லது கவியின்மொழிகளாகவும் இருக்கலாம். இவை முனிவர்வார்த்தைகளாயிருக்குமாயின் இதுவரையில் சொன்ன கதையும் அவர் வாயைக்கொண்டே நேராகக் கவி சொல்லவைத்ததென்று நினைக்க இடமுண்டு. அல்லது, "ஈது" என்பதற்கு 'இப்படிப் பட்டது' என்று அர்த்தம் செய்தால், முன் சொன்ன கதையெல்லாம் கவி தன்னாலேயே தன்னுரையைக் கொண்டே சொன்னது போலாகும். நூலின் இடையிடையே சந்திரன்சுவர்க்கியைப் புகழ்தல், புலவரே கதையை நேராகச்சொல்லும் முறைக்குப் பொருந்துமேயன்றி வியாஸர் வாக்கில் அது பொருத்தமுடையதாகாது. மேலும், கலிநீங்குகாண்டம் 49-வது செய்யுளில் "மள்ளுவநாட்டு எம் கோமான் சந்திரன் சுவர்க்கி" என வந்திருப்பதை நோக்கும்போது, 'எம் கோமான்' என்றது கவிக்கூற்றிற்கே ஏற்றதாகும்.

வாழி யருமறைகள் வாழிநல் லந்தணர்கள்
வாழிநளன் காதை வழுத்துவோர்—வாழிய
மள்ளுவநாட் டாங்கண் வருசந்திரன் சுவர்க்கி
தெள்ளுறுமெய்க் கீர்த்தி சிறந்து. 95.

பொழிப்புரை:—அருமையான வேதங்கள் வாழட்டும். நல்ல அந்தணர்கள் வாழட்டும். நளனுடையகதையைப்புகழ்ந்துகூறுவோரும்கேட்போரும் வாழட்டும். மள்ளுவநாட்டில் உதித்திருக்கின்ற சந்திரன்சுவர்க்கியினது தூய்மையான மெய்க்கீர்த்தி நாளுக்குநாள் சிறந்து வாழட்டும்.

விரிவுரை:-இவ்விதம் மங்களம் பாடி நளனுடைய சரித்திரத்தைப் புகழேந்திப்புலவர் நிறைவேற்றுகின்றனர். முன் நளன் நமக்காகக் கலிபுருடனிடம் கேட்டுக்கொண்ட வரத்தின்படி இக்கதையை விரும்பிப் படித்தவரை இக்காலத்திலும் துன்ப மடையாதென்றுரைப்பதற் கையமில்லை. இலக்கியச் சுவையையூட்டி வளர்க்குந் திறத்தில் இந் நளவெண்பா மிகவுஞ் சிறந்ததாம். இலக்கியச்சுவை முதிரமுதிர அம்முதிர்ச்சிக்கேற்றஅளவு நம் இடர்களும் அகன்றுகொண்டே போவதாகும். தமிழைக் கற்கத் துவக்கும் காலத்திலும் எளிதும் இனிதுமாயிருக்கும் நூல் இது, பல பிற கற்றபின் ஓதினாலும் அருமையும் பெருமையும் அதிகம் காண்பதற் கொத்தது.

நளவெண்பா முற்றிற்று.

இலக்கணம்

வேற்றுமை, வினை, பண்பு உவமை உம்மைஎனும் ஐவகைத் தொகைநிலைத்தொடர்களுக்குப் புறத்தேயும் வேறுசில சொற்கள்மறைந்திருந்துஅன்மொழித் தொகைகள் ஆவதைக் கற்றீர். இவ்வாறு ஆகின்ற அன்மொழித்தொகைகள், அத்தொடரில் வந்துள சொற்கள் இயற்கையாய்க் கொண்டுள்ள பொருளைப் பெற்றிராமல் வேறொரு பொருளைக் குறிக்கின்றன. பொற்றொடி பேசினாள்; தாழ்குழல் பேசினாள்; மெல்லியல் மொழிந்தாள்; தேன்மொழி கூறினாள்; உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு; என்னும் உதாரணங்களிலுள்ள பொற்றொடி முதலிய ஐவகைத் தொகைகளுக்குப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைகள் தமக்கு இயற்கையாயுள்ள பொருள்களைக் காட்டாமல்வேறு பொருளைக் காட்டிநிற்கின்றன. பொன்தொடி, என்பதற்கு இயற்கையாயுள்ள அர்த்தம் பொன்னால் செய்த வளை என்பது. ஆனால், 'பொன்தொடி பேசினாள்' என்னும்போது பேசிய காரியத்தைச் செய்தவை வளையல்கள் என்று எவரும் எண்ணார். ஆதலால் அது இங்கு ஒரு பெண்ணைக் குறிக்கின்றது. மற்ற உதாரணங்களாலும் இப்படியே அன்மொழித் தொகைகள், சொற்களின் இயற்கையாய பொருள்களிலிருந்து மாறி வேறுபொருளைத் தந்து நிற்பதை அறியலாம்.

ஆகுபெயர்களும் இப்படியே சொற்களின் இயற்கைப்பொருள் மாறி வேறுபொருள்கள் தருவன என்பதைக் கற்றிருக்கின்றீர். "கோபத்தால் அவளது கயல்கள் சிவந்தன," என்னும் உதாரணத்தில் கயல்கள் என்னும் சொல் மீனைக் குறிக்காமல் கண்ணைக் குறிக்கும் உவமை யாகுபெயர். காரிகை, என்ற சொல்லிற்கு 'அழகு' என்பது அர்த்தம். அது பண்பாகுபெயராய்ப் 'பெண்' என்ற வேறு பொருளைத் தருவதைக் கண்டிருப்பீர். 'கயவர்களை உலகம் இகழும்', என்னும்போது உலகம் என்பது அதன் இயற்கையாய அர்த்தத்தின்படி பூமியைக் காட்டாமல் மனிதர்களைக் குறிப்பதால் இடவாகுபெயராகின்றது.

இவ்விதம் அன்மொழித்தொகை, ஆகுபெயர் என்னும் இவ்விரண்டும் தமக்கு இயற்கையாக உள்ள பொருள்களுக்குப் பதிலாக வேறு பொருள்களைக் குறிப்பனவானாலும் அவைகளுக்குள் வித்தியாசம் இருக்கின்றது:—காரிகை வந்தாள்; இராமன் தன் மயிலோடு வனம் சென்றான்; மீண்ட நளனைக்கண்டு மாவிந்தம் மகிழ்ந்தது; என்னும் உதாரணங்களில் காரிகை, மயில், மாவிந்தம் என்ற சொற்களைப்போல் ஆகுபெயர்கள் வேறு ஒரு சொல்லின் தொடர்பில்லாமல் தாமாகவே சந்தர்ப்பத்திற்கேற்றவேறு பொருளை எய்தி நிற்கும். அன்மொழித்தொகையோ அவ்வாறன்று. இரண்டு சொற்கள் ஒன்றாய்த் தொடர அத்தொடரின் உதவியினால் பொருள் வேறுபடக்கூடியது அன்மொழித்தொகை.அத்தொடரும்யாதாவதொரு தொகைநிலைத்தொடரா யிருக்கவும்வேண்டும். 'பிறைநுதல் பேசினாள்' என்னும்போது, பிறை நுதல் என்னும் அவ்விரு சொற்களும் உவமத்தொகையாகி ஒன்றாய்த் தொடர்ந்து வருவதாற்றான் 'பெண்' என்ற பொருள் பெறக்கூடும். பிறை பேசினாள் என்றாலும் நுதல் பேசினாள் என்றாலும் பெண்பேசினாள் என்ற பொருள் கிடைக்காது; பிறைநுதல் என்று ஒன்றாய்ச் சேர்ந்தால் 'பெண்' என்ற பொருள் வரும்.

ஆகுபெயர்கள் தொன்றுதொட்டு இதற்கு இது என்று ஆன்றோர்களால் ஆக்கப்பெற்று வழங்கி வருவன. இப்பொழுது நமது மனம்போனபடி புதிது புதிதாக ஆகுபெயர்கள் ஆக்கிக்கொள்ளல் கூடாது. அழகு என்னும் அர்த்தம் உடைய காரிகை என்னும் சொல்லை அக்காரிகை என்னும் குணத்தையுடைய பெண்ணிற்கு ஆக்கி வழங்குவர். ஆனால் அழகு வந்தாள், என்றுநாம் இப்பொழுதோ பெண்ணைக்குறிக்க அழகு என்னும்சொல்லையேவழங்கஇயலாது எனவே ஆகுபெயர்களுக்கு ஒரு நியதி உண்டு. அன்மொழித்தொகைகளும், மனம்போனபடி அமைத்துக்கொள்ளத்தக்கன வல்லவாயினும் தொன்றுதொட்டுவந்தனவா யிருக்கவேண்டுமெனும் நியதி ஆகுபெயர்களினளவு அன்மொழித் தொகைகளுக்கு இல்லை. புலவர் தம்முடைய நல்லுணர்வின் தன்மைக்குத் தக்கபடி அவ்வப்பொது அன்மொழித் தொகைகளை அமைத்துக்கொள்வது இழுக்காகாது. புரிவளை, வரிவளை, செறிவளை, ஆய்வளை என்பனபோல் 'பெண்' என்ற வேறு பொருளைக்குறிக்க அன்மொழித்தொகைகள் பலவாறு அமையக் காண்கின்றோம். எனினும், வரிகளமைந்த வளையல்கள் அணிந்த பெண்ணை வரிவளை என்றழைப்பதால், பொன்னாலாகிய சிலம்பை அணிந்த ஒருத்தியைக் குறித்து 'என்றாள் ஒரு பொற்சிலம்பு" என்று கவிகள் கூறக் கண்டிலோம். "அணியிழை" என்பது பெண்ணைக் குறிக்கும் ஒரு அன்மொழித்தொகை. இதை ஒட்டிப் 'பட்டாடை' என்பது அன்மொழித்தொகையாய்ப்பெண் என்னும் வேறு பொருளில் வரப் பார்த்ததில்லை.

இதனோடு சொற்றொடரிலக்கணம் முடிகின்றது.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

5-ம் பத்து 3-ம் தசகம்.

[471-வது பக்கத் தொடர்ச்சி]

7-ம் பாசுரம்.

வலையு ளகப்படுத் தென்னைநன் னெஞ்சங் கூவிக்கொண்
டலைகடற் பள்ளியம் மானை யாழிப்பிரான் றன்னைக்
கலைகொ ளகலல்குற் றோழிநங் கண்களாற் கண்டு
தலையில் வணங்கவு மாங்கொலோ தையலார்முன்பே.

உரை:—தன்னிடத்திலுள்ள ஆசையாகிற வலையிலகப்படுத்தி என் மனதை என்னிடமிருக்கவிடாமல் அடியோடே கூவிக்கொண்டு திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட அம்மானாகிய சக்கராயுததாரியான பிரபுவை உலகத்து மாதர்கள்முன்னே நாம் கண்ணால் கண்டு தலையால் வணங்கவு மாகுமோ? அருமையான அழகுவாய்ந்த தோழி என்ன சொல்லுகின்றாய்—என்று வினவுகிறாள்.

குறிப்பு:—இதுவரையில் தர்க்கம்செய்து பல காரணங்கள் கூறி மடலூருவதை நிவர்த்திக்க எத்தனித்த தோழி இப்பிராட்டியின் மனோநிச்சயத்தையும் வேறு

உபாயத்தால் மீட்க வகையில்லாமையுங் கண்டு ஒருவாறு பிராட்டியின் கருத்துக்கிசைய அவளையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு எம்பெருமானைக் காணத் தமக்கு வாய்க்குமோவென்று வினவுகின்ருள்.

குறிப்பு:-இப்பிராட்டிக்கு இப்போது நடவாநின்ற துக்கம் ஸ்ரீகிருஷ்ணனைத் தூஷிக்கின்ற தங்கள் ஊர்த் தையலார்மேல் பாய்ந்து அவர்கள்முன்னர் அந்தப் பிரபுவின் அருளைப் பெறுவோமோவென்று தோழியை வினவுகின்ருள்.

8-ம் பாசுரம்

பேய்முலை யுண்டு சகடம் பாய்ந்து மருதிடைப்
போய்முதல் சாய்த்துப் புள்வாய் பிளந்து களிறட்ட
தூமுறுவற் றொண்டைவாய்ப் பிரானையெந் நாள்கொ
யாமுறு கின்றது தோழி யன்னையர் நாணவே. [லோ

உரை:—பூதனையை ஸம்ஹரித்தும் சகடாஸுரனை உதைத்துக் கொன்றும், யமளார்ஜுன மரங்களின் நடுவில் அகப்படாதே தப்பித்துப்போய் அவைகள் இரண்டையும் வேர்சாய்ந்து உயிர் துறக்கும்படி செய்தும் (முதல் சாய்வது), பகாஸுரனுடைய வாயைக் கிழித்தும், (களிறு அட்ட) குவலயபீடம் என்கிற யானையினுடைய தந்தங்களைப் பிடுங்கி அவற்ருலேயே அதைக் கொன்றும் (தூமுறுவல்)-இவைகள் எல்லாம் ஒரு பொருட்டோவென்று வெகு இலாகவமாய்ச் செய்து முடித்து மந்தமாய்க் கோவைப் பழம் போன்ற வாயால் சிரித்த பிரபுவை எந்தநாளிலோ சேரப்போகின்ருேம் தோழி நம் தாய்மார் இலச்சைபட்டுத் தலை குனியும்படி—என்கிருள்.

குறிப்பு I:—ஸ்ரீ கிருஷ்ணபகவானது சரித்திரத்தை விவரமாய்எடுத்து இப்பாசுரம் பேசினது, அவன் இத்தனை விரோதிகளை ஸம்ஹாரம் செய்ததெல்லாம் தன்னை யாச்ரயித்த பக்தஜனங்களின் நிமித்தமாக ஆநாயாஸமாய் எளிதிற் செய்தருளினனென்று காட்டுதல்பொருட்டு. இப்படி ஆச்ரிதரக்ஷகனை கடியனென்றும் குரூரனென்றும் மாயவனென்றும் மோசக்காரனென்றும் நம் அன்னைமார்களும் சொன்னர்களே! தகுதியில்லாததைப் பேசினவர் நாணும்படி நாம் அவனை அடையவேண்டுமென்று சொல்லுகிருள்.

குறிப்பு II:—சென்ற பாசுரத்தில் ஊர்த்தையலார் ஸ்ரீ கிருஷ்ணனைத் தூற்றுகிருர்கள் - கடியன் கொடியனென்று அவர்கள் உரைத்த பகவானே நம்திறத்தில் கிருபைசெய்து நம்மை ஏற்ருல், அவர்கள் இவனை 'நாம் வசைவார்த்தைகளைச் சொன்னேமே' என்று வெட்கப்படுவார்கள் என்ருள். இப்பாசுரத்தில், அன்னைமார் அவனைத் தூற்றினதற்கு நாணமடைய நாம் காணுவோம் என்கிருள், இப்பிராட்டி.

குறிப்பு III:—இது இப்படி இருக்க, அடுத்த பாசுரத்தில், இப்பிராட்டி, தானே "சற்றுப் பொறுத்திரு, நான் மடலூர்ந்து, ஸ்ரீ கிருஷ்ணபகவானை உலகத்தோர் அலர் தூற்றும்படி செய்வோம்" என்றும் 10, வது பாசுரத்தில், ஊரவரான பிறர்தையலார் "நாமடங்காப் பழிக்கூற்று உரைக்கட்டும்—நாடு இரைக்கட்டும் - இவ்வுலகமல்லாது மற்ற உலகங்களும் அவனது தயவின்மை இகழ்ச்சியாய்ப் பரவட்டும்" என்று அபேக்ஷிக்கின்ருள். இது எப்படிப் பொருந்துமென்ருலோ, தன்னுடைய விரஹதெசையிலும் மோஹதெசையிலும் கிருஷ்ணனை அலர்தூற்றத் தனக்குப் பாத்தியமுண்டு, பிறர்க்கு அது ஒவ்வாது; என்றபுத்தியால் சொன்னபடி.

9-ம் பாசுரம்.

[கூவிக்கொண்டு
நாணும் நிறையுங் கவர்ந்தென்னை நன்னெஞ்சங்
சேணுயர் வானத் திருக்குந் தேவபிரான் றன்னை
யாணை என்றோழி யுலகு தோறலர் தூற்றியாங்
கோணை கள்செய்து குதிரி யாய்மட லூர்துமே.

குறிப்பு:—இதுவரையில் இப்பிராட்டி மடலூர்ந்து ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றத் தன் மனதில் தீர்ந்திருந்தாலும் வாய்வார்த்தைகள் சொல்லி இதைப் பிரவுசித்தப்படுத்தாதிருந்தவள் இப்பாசுரத்தில் "தோழி உனக்கு ஆணை" குமார்க்கங்களிலாவது பிரவேசித்து மடலூர்ந்து, நம்நல்லநெஞ்சைத் தூக்கிக்கொண்டு அமரர்களுக்குக்கூட எட்டாமல் ஆகாயத்தில் சென்ற பகவானைக் குதிரியாய் அலர்தூற்றி உலகம் சிரிக்கும்படி செய்வேன்" என்கிருள். "தோழி" என்ற ஸம்போதனம் அவளும் தன் மனதின் ஊக்கத்தைக்கண்டு மடலூர இசைந்துவிட்டாளென்கிற சந்தோஷத்தால் பிரயோகித்தபடி.

பதக்குறிப்பு:—குதிரி - கிரமமான மட்டுக்கும் மரியாதைக்கும் அடங்காதபெண். "உலகுதோறும்" என்றதால் எல்லாத் தேசங்களிலும் தூற்றுவோம் - என்று தொனி.

10-ம் பாசுரம்.

மாமட லூர்ந்து மெம்மாழி யங்கைப் பிரானுடைத்
தூமடற் றண்ணந் துழாய்மலர் கொண்டு சூடுவோம்
யாமட மின்றித் தெருவு தோறயற் றையலார்
நாமடங் காப்பழி தூற்றி நாடமி ரைக்கவே.

உரை:—யா மடம்இன்றி-பெண்களுக் குரியதாகிய யாதொரு விதமான அடக்கமுமின்றி, தெருவுதோறு அயல் தையலார் - தெருக்களில்உள்ள பிறர் பெண்டுகள், நா மடங்கா - நாவுக்கு ஒப்தலில்லாமல், பழி தூற்றி - அதி குரூரமான பழிப்புமொழிகளைச் சொல்லி, நாடும் இரைக்கவே - ஸர்வலோகத்தாரும் இதென்ன நிர்த்தயை என்று தெரிந்து அவனைக் கூப்பிடும்படி, ஆழியங்கைப்பிரான் - சக்கராயுதம் தரித்த பிரபுவின், தூ-பரிசுத்தமான, தண்ணந்துழாய் மலர் கொண்டு - அவனைத்தேடிப் பிடித்துத் துளபமாலைப் பிரஸாதத்தை அவனிடம்பெற்று அதனைச் சிரசில் வகிப்போம்—தனக்கு எவ்வளவு அதைரியமிருந்தாலும் பகவானுன பிரபு இப்பிராட்டிக்கு அருள் புரிவாரென்றும் ஒரு பக்ஷம் அவளது நம்பிக்கை வற்புறுத்துகிறது.

11-ம் பாசுரம்

இரைக்குங் கருங்கடல் வண்ணன் கண்ணபிரான்றன்னை
விரைகொள் பொழிற் குருகூர்ச்சடகோபன்சொன்ன
நிரைகொ ளந்தாதி யோரா யிரத்து ளிப்பத்து
முரைக்க வல்லாருக்கு வைகுந்த மாகும் தம்மூரெல்
[லாம்.

பொழிப்புரை:—ஓதங்கள் அலைந்தடிக்கின்ற கடல் போலிருந்த திருமேனியையுடைய கண்ணபிரான் தன்னை விரைகொள் பொழில் குருகூர்ச் சடகோபன் சொல்லாகிய நிரைகொள் ஆயிரத்து இப்பத்தும் உரைக்க வல்லாருக்கு இத் திருவாய்மொழியைச் சொல்லத் தாங்களிருந்த தேசமே தங்களுக்குத் திருநாடுபோல் ஆநந்தத்தைக் கொடுக்கும்.

விசேஷக் குறிப்பு:—எம்பெருமான் தன் ஆச்ரிதருக்குக் கிரமமில்லாத வழியாலேயாகிலும் தன்னைப் பெறவேண்டுமென்று அதிகப் பிரேமையை உண்டாக்குகிருனென்பது இத்தசகத்தின் நோக்கு.

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[447-வது பக்கத் தொடர்ச்சி]

ந

1378 நகைபல்லு மகிழ்வு மொளியு மிகழ்ச்சியும்
சிரிப்பு முகமலர்ச்சியு முகையு மாகும்.
1379 நகமரப் பேரு மலையு முகிரும்.
1380 நகுத லொளிர்தலு நகுதலு மாகும்.
1381 நகரே மனையு மூருங் கோயிலும்.
1382 நக்க னருகனு நிருவாணியுஞ் சம்புவும்.
1383 நக்கல் திண்டலுந் தின்றலு நகைத்தலும்
நக்குதலு மகிழ்ச்சியு நவில லாகும்.
1384 நடையோர் கூத்தும் வாயிலும் நடையும்
செல்வழு மொழுக்கமும் வழியு மாகும்.
1385 நடலை வீம்பும் வஞ்சனையும் பொய்யும்
நடுங்கிடனு நடுக்கமு நவில லாகும்.
1386 நட்ட நடமுங் கேடு மாகும்.
1387 நடுநடுச் சொல்லு மிடையு நாப்பணும்.
1388 நதியே மலையு மாறு மாகும்.
1389 நத்த நகர்ப்புறனு மூரு மல்லும்
சங்கு மாக்கமு மூமையு மிரவும்.
1390 நந்தி பேரிகையு மிடபமுஞ் சிவனும்
செக்கா னுமெனச் செப்ப லாகும்.
1391 நந்தல் கேடு மாக்கமு மாகும்.
1392 நந்து நத்தையுஞ் சங்கு மாகும்.
1393 நயமே யின்பமு ஞாயமு நன்றியும்.
1394 நயந்தோன் கணவனு நண்பனு மாகும்.
1395 நரைவெண் பரியும் வெண்மையுங் கவரியும்
நாரையு மேறு நவில லாகும்.
1396 நரந்தங் காக்கையு மணமுங் கத் தூரியும்
நாரத் தையுமென நவில லாகும்.
1397 நலமுப காரமுந் தேனுஞ் சுகமும்.
1398 நவங்கார் காலமும் பூமியும் புதுமையும்
கூத்தும் பாம்பு மொன்பதுந் தொண்டும்
பழமையுங் கேண்மையும் பகர லாகும்.
1399 நவிலல் சொல்லுதலும் பண்ணுதலு மாகும்.
1400 நவிரம் மருதயாழ்த் திறமு மலையும்
புன்மையு மயிரு மலையி னுச்சியும்
உச்சியு மெனவே யுரைக்க லாகும்.
1401 நவிர்தக் கேசியு மாண்பான் மயிரும்
மருதயாழ்த் திறமும் வாளு மாகும்.
1402 நவியங் கோடாலியு மழுவு மாகும்.
1403 நவ்வி மரக்கலமு மானு மாகும்.
1304 நவமணி பொன்னு நவமணியு மாகும்.
1405 நள்ளியோர் வள்ளலு நண்டு மாகும்.
1406 நளினி செய்யாளும் வாவியும் பண்ணும்.
1407 நளியே குளிரும் வெறுப்பு நண்டும்
பெருமையுஞ் செறிவும் பேச லாகும்.
1408 நளமே [1]தாமரையு மகலு மாகும்.
1409 நறவந் தேனு நாகமு மாகும்.
1410 நனை பூ மொட்டுங் கள்ளு மதமும்.
1411 நனந்தலை நடுவு முச்சியு மாகும்.
1412 நனவு தெளிவு மகலமுங் களனும்.
1413 நன்று மிகுதியு நன்மையு மாகும்.
1414 நன்னி தவசமுஞ் சுக்கிலமு மாகும்.

நா

1415 நாகம் விண்ணுங் குரங்குந் தூசும்
விண்ணொரு மலையும் பாம்பும் யானையும்
புன்னையுங் காரீயமு மோசையு ஞாழலும்.
1416 நாகு விலங்கின் பெண்ணு மரையும்
மேதியு மீனு விளமையு நத்தையும்
காகு மிள[மர]மு நீர்வாழ் சாதியும்
ஆரமு மெனவே யறைய லாகும்.
1417 நாஞ்சில் கலப்பையு மதிலு மாகும்.
1418 நாடி நாழிகையு நரம்பு நாசிகையும்.
1419 நாட்டங் கண்ணும் பண்ணும் வாளும்
ஆடலு மெனவே யறைய லாகும்.
1420 நாண்மாதர் மங்கல நாணு நாணமும்
கயிறு மெனவே கழற லாகும்.
1421 நாதன் சிவனுங் கோவு மூத்தோரும்
கேளு மெனவே கிளத்தினர் புலவர்.
1422 நாப்ப ணடுவுந் தேரின் றட்டும்
யாழுறுப் புமென நவில லாகும்.
1423 நாமம் பெயரு மச்சமும் பெருமையும்.
1424 நாரம் நீரு மம்பும் வாசியும்
ஈரமுங் கயிறு மன்பு நாரும்.
1425 நாரி பன்றுடையும் வில்லின் நாணும்
நறவும் பெண்ணு நவில லாகும்.
1426 நால்வாய் மாப்போ கியுமைங் கரனும்.
1427 நாவிதன் பூர நாளு மறுமீனும்
இரேபதி யுமயிர் வினைஞனு மாகும்.
1428 நாழியுட் டுளையும் பூரட் டாதியும்
நாழிகையும் படியு நவில லாகும்.
1429 நாளே செவ்வியு நாளு மலரும்
உடுவுங் காலையு முரைக்க லாகும்.
1430 நாளி நாயுங் கள்ளு மாகும்.
1431 நாற்றந் தோன்றலு நாறுதலு மாகும்.
1432 நாறு நாற்றமு நெல்லு நாறும்.
1433 நானங் கத்தூரியு மணமுங்[2] கவரி
மாவும் பூசுவனவு நீராடலு மாகும்.
1434 நான்முக னருகனும் வேதனு மாகும்.

நி

1435 நிசியரி சனமும் பொன்னு மிரவும்
இருளு நீலமு மியம்ப லாகும்.
1436 நிசித மிகழ்ச்சியும் பொய்யுங் கூர்மையும்.

(பிரதி) 1. சிங்கமு.

(பிரதி) 2. ஞானமும்.

1437 நிதம்ப மல்குலும் மலையின் பக்கமும்.
1438 நிதிலைப்பும் பொன்னு மிருவகை நிதியும்
கதையு மெனவே கழற லாகும்.
1439 நித்தியந் தினமு மழிவில் பொருளும்.
1440 நிமிர லுயர்வுஞ் சோறு மாகும்.
1441 நியமஞ் சுடுகாடுங் கோயிலும் வீதியும்
கடையு நிச்சயமு நகரமுந் தவமும்
நியமஞ் செய்தலு மொருபட்சியு மாகும்.
1442 நிருமித்தல் படைத்தலு மாராய் தலுமாம்.
1443 நிரப்புக் குறைபாடு மின்மையு மாகும்.
1444 நிலையே பொழுதுங் குணமு முறைமையும்
நிலைபெறு மாறு முத்தியு மாகும்.
1445 நிலவு சந்திரனு மொளியு மாகும்.
1446 நிவப்பு நிவத்தலுஞ் சேணு நீளமும்.
1447 நிழல்மரக் கொம்புஞ் செல்வமுங் குளிர்ச்சியும்
சாயையு நோயுங் கிருபையு மாகும்.
1448 நிழற்ற ளிழற்செயலு நிழலு நுணுக்கமும்
நிரம்பா மென்சொல்லு நிகழ்த்தினர் புலவர்.
1449 நிறைநீர்ச் சாலு மாசையு முணர்வும்
துலாமு மழியா நிலையுஞ் சொல்லுவர்.
1450 நிறம்பிர காசமு நிறமு மார்பும்.

நீ

1451 நீக்கல் கொல்லலு நீக்கலு மாகும்.
1452 நீத்தம் வெள்ளமு நீரு மாகும்.
1453 நீப நீர்க்கடம்பு முத்திரட் டாதியும்
நிமித்தமு மெனவே நிகழ்த்தினர் புலவர்
1454 நீலி சங்கரியு மாலுந் துர்க்கையும்
அவுரியுங் கருப்பு மறைய லாகும்.
1455 நீலங் காலமு நீலமு நிறமும்
மணியு மிருளு நெய்தலும் பனையும்.
1456 நீல் நீலநிறமுங் காற்று மாகும்.
1457 நீவி யாடையு மிறகு மழித்தலும்.
துடைத்தலுந கொய்சகமுஞ் சொல்ல லாகும்.
1458 நீழ லொளியு நிழலு நகையும்
ஆர்ப்பத முமென வறைய லாகும்.

நு

1459 நுணங்கு தேமலு நுண்மையு நுனியும்.
1460 நுணவை யெண்ணு மோலையும் பிணியும்.
1461 நுதம்பு கள்ளு மமுது மாகும்.
1462 நுதலே நெற்றியும் புருவமுங் கருதலும்
புதலு மெனவே புகல லாகும்.
1463 நுரையே வெண்ணெயு நுரையு மாகும்.
1464 நுவணை தினைமாவு நுண்மையு நூலும்.
1465 நுனியே நுண்மையு நுனியு மாகும்.

நூ

1466 நூல் சாத்திரமு நூலுங் கொடியும்
இல்லை யெனலும் எண்ணலும் வேதமும்.
1467 நூலோ ரமைச்சரும் பார்ப்பாரும் புலவரும்.
1468 நூழில் செக்கும் யானையுங் கொடியும்
திரையும் நுண்பொடியுங் கோறலுஞ் செப்புவர்.
1469 நூன நிச்சயமுங் குறைவு மாகும்.

நெ

1470 நெகிழுஞ் சங்கிலியும் விலங்கு மாகும்.
1471 நெஞ்சு மார்பு மனமு மாகும்.
1472 நெடுமை பெண்மயிரும் வார்தலும் நெடுமையும்.
நெட்டி ரலுமமு நெட்டியு மாகும்.
1473 * நெட்டை நெடுமையு நெய்யு மாகும்.
1474 நெய்தல் கடற்சார்பு நெய்தற் பூவும்
சாபறையு நெசவுஞ் சாற்ற லாகும்.
1475 நெல்லே வாகையு நெல்லு மாகும்.
1476 நெற்றி படையுறுப்பு நெற்றியு மாகும்.
1477 நெறியே நீதியும் வழியு மாகும்.

நே

1478 நேத்திரம் கண்ணும் பட்டா டையும்
1479 நேமி சக்கரமும் வட்டமு மூங்கிலும்
பூமியுங் கடலு நேமிப் புள்ளும்
சகுனமுந் தேர்க்காலுஞ் சாற்ற லாகும்.
1480 நேய மன்பு நெய்யு மெண்ணெயும்.
1481 நேர்தலைப் படலுஞ் சமனு மீதலும்.
பாதியு நெடிலு மொப்பு நுட்பமும்
உடன்பாடு நேரு மஞ்சமுந் தனியும்
மிகுதியு மெனவே விளம்ப லாகும்.
1482 நேர்த லிசைதலு மெலிதலும் வேண்டலும்
எதிர்தலு மெனவே யியம்ப லாகும்.
1483 நேர லுடன்பாடு மண்டலு மாகும்.

நொ

1484 நொச்சி மதிலும் மதிலின் காவலுஞ்
சிற்றூரு நொச்சியுஞ் செப்ப லாகும்.
1485 நொடியே வார்த்தையுங் காதையு நொடியும்.
1486 நொறில் சீக்கிரமு மொடுக்கமு நுடக்கமும்.

நோ

1487 நோக்குப் பார்வையுங் காதல்தரும் மாதரும்
அழகும் மெனவே யறைய லாகும்.
1488 நோற்றல் பொறையுந் தவஞ் செய்தலுமாம்.
1489 நோனமை பொறுமையுந் தவஞ்செய் யாமையும்.
1490 நோனர் தவமில் லோரும் பகைவரும்.
1491 நோன்மை வலியுந் தவமும் பொறையும்
எண்ணு மெனவே யியம்ப லாகும்.

* இது ஒரு பிரதியில் இல்லை.

மதிப்புரை

யாழ்ப்பாணச் சரித்திரம்

ஆசிரியர்:—முதலியார் C. இராசநாயகம் C. C. S. விலை ரூ. 1—8—0

ஸ்ரீமான் முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் பற்பல அரிய பண்டை நூல்களை நன்றாய் ஆராய்ச்சிசெய்து, நவீனமாயியற்றி வெளியிட்டுள்ள யாழ்ப்பாணச் சரித்திரம் என்னும் சிறந்த நூலை நம் பார்வைக்கும் மதிப்புரைக்கும் மிக்க அன்புடன் அனுப்பிவைத்ததைக் குறித்து நாம் மிகவும் மகிழ்வுறுகின்றோம். இத்தகைய நூல்கள் சில முன்னரே வெளிவந்திருப்பினும், இதுபோல் எந்நூலும் தக்க ஆதாரங்களோடும் மேற்கோள்களோடும்இயற்றப்பட்டிலதென்பது இந்நூலைப் படிப்போர்க்குத் தோன்றுமற் போகாது.

நமது ஆசிரியர் சுமார் 131 ஆங்கில நூல்களையும், 74 தமிழ் நூல்களையும், 27 சமஸ்கிருத பாலி சிங்கள நூல்களையும் நன்காராய்ந்து, யாழ்ப்பாணத்தின் சரித்திரத்தை, நாகர்காலம், கலிங்கர் காலம், ஆரியச் சக்கரவர்த்திகள் காலம், ஆரியவரசர் இறுதிக்காலம், போர்த்துக்கேயர் காலம், ஒல்லாந்தர் காலம் என முறைப்படுத்தி, அவ்வக்காலங்களில் நிகழ்ந்த விசேஷ

சம்பவங்களையும், அவற்றைக்கொண்டு தாம் கொண்டுள்ள அபிப்பிராயங்களையும் விஸ்தாரமாகக் கூறியுள்ளார்.

நம்ஆசிரியர் முதலில், யாழ்ப்பாணம் என்னும் நாடு பூர்வகாலத்தில் எங்ஙிலையிலிருந்ததென்று கூறி, ஆதியில் அதாவது கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே, மேற்கில் நாகதீவம், மணிநாகதீவம், மணிபுரம், மணிபல்லவம் என்னும் நாமங்களால் வழங்கப்பட்ட ஓர் பெரிய தீவாகவும், கிழக்கில் எருமை முல்லைத்தீவு என்னும் மற்றொரு தீவாகவும், ஆக இரண்டு பிரிவாக விருந்ததென்றும், பிற்காலத்தில் இவை ஒன்றுசேர்ந்து யாழ்ப்பாணக் குடா நாடாயிற்றென்றும் பல காரணங்களைக் கொண்டு கூறுகின்றார்.

பின்னர் யாழ்ப்பாணத்துப் பூர்வ குடிகளைக் கூறுவான்றொடங்கி, நாகரும் இயக்கருமே ஆதியில் இலங்கையில் குடியேறினவர்களென்றும், அவர்கள் யாழ்ப்பாணத்தில் எவ்வெவ்விடங்களில் குடியேறினார்களென்றும், எங்கிருந்து வந்தார்களென்றும் அவர்களுடைய இராஜதானி எதுவென்றும், அவர்கள் எக்குலத்தைச் சேர்ந்தவர்களென்றும், அவர்களுடைய ரூபவமைப்பு எப்படிப்பட்டதென்றும் பல காரணங்களைக்காட்டிக் குறிப்பிடுகின்றார்.

இவ்விரு குலத்தவரும் பின்னால் விவாக சம்பந்தம் செய்து வலிபெற்றுச் சிறப்புற்றன ரென்பதைக் காட்டுமாறு நம்மாசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்:—
"இலங்கையின் வடபாகத்திலுள்ளதும், இப்போது மாதோட்டம் என்று அழைக்கப்படுவதுமான மாந்தை என்னும் நகரத்தில் நாகர் குலத்தைச் சேர்ந்த ஓவிய குலத்தவரும், தேவசிற்பியாகிய விஸ்வகர்மாவின் வம்சத்தவருமாகிய "கம்மியர்" அரசாண்டுவந்தார்கள். இலங்கையை அரசாண்ட இயக்கவரசனாகிய இராவணன் தேவி மண்டோதரியும் அவன் சிறிய தந்தையாகிய குபேரன் தேவி சித்திரரேகையும் இம்மாந்தை நகரில் அரசுசெய்த தேவகம்மியரின் கன்னிகைகளே...........தென்னிலங்கை வேந்தராகிய இராவணாதியர் அவ் வோவியவரசர் வம்சத்தில் மணஞ்செய்யலாயினர். இயக்க வரசர்கள் வலிகுன்றிப் பண்டைப் பெருஞ்சிறப் பருகிய காலத்தும், விஜயராஜன் இலங்கைக்கு வந்த பின்னரும், கிறிஸ்துவுக்குப் பின் சில நூற்றாண்டுகளாகவும் இம்மாந்தை அரசர் காந்தக் கோட்டை யென்று பலதேசத்தவர்களாற் கொண்டாடப் பட்டதும் தூங்கெயில் என்று பழந்தமிழ் இலக்கியங்களிற் பாராட்டப்பட்டதுமான இருப்புக் கோட்டையை யுடையவர்களாயும் வாணிபத்திற் பெருஞ் செழிப்புற்றோங்கினவராயும், வீரமும் தியாகமும் பொருந்தினவர்களாயும் வாழ்ந்திருந்தார்களென்றால், அவர்கள் அரசியற் பெருமையும், புரைதவிர் சிறப்பும் அறையும் தரத்தவோ"

இன்னும் இந்நூலாசிரியர் தமது ஆராய்ச்சியின் பயனாகத் துணிந்துரைத்திருக்கும் பலவிஷயங்கள் யாவர்க்கும் வியப்பைத் தருவதோடு அவருடைய நுண்ணிய அறிவையும், ஆராய்ச்சித் திறனையும் ஆர்வத்தையும் விளக்குவனவாகும். மணிமேகலை என்னும் பாரகாவியத்தின்கண்ணே கூறப்பட்ட மணிபல்லவம்எனப்படும் தீவு யாழ்ப்பாணமேயென நிலைநாட்டுவதும், பல்லவர்களின் பூர்வோத்திரத்தைப் பற்றிப் பற்பல சரித்திர ஆசிரியர்கள் வேறுவகையாய்க் கூறியிருப்பினும், அவர்கள் கிள்ளிவளவன் என்னும் சோழவரசன் நாகவரசன் குமாரத்தி பீலிவளை என்பவளைக் காதலித்துப் பெற்ற தொண்டைமான் இளந்திரையனுடைய மரபைச் சேர்ந்த தமிழ் அரசராமென்று கூறுவதும், அறிய பண்டை நூல்களை நன்றாக ஆராய்ந்தவர்க்கன்றி மற்றையோர்க் கியல்வதரிது. இங்கு நம்மாசிரியர் கூறியுள்ள ஆதாரங்கள் அவர் கூற்றைச் சாலவும் உறுதிப்படுத்துகின்றன.

இவ்வண்ணமே நம்மாசிரியர், யாழ்ப்பாணத்துப் பண்டைத் துறைமுகங்கள், வர்த்தகம், தொழில், யாழ்ப்பாணத்திலுள்ள புத்த ஆலயவினை, சிங்கள அரசர்களின் உற்பத்தி, யாழ்ப்பாணத்தை யாண்ட மன்னவர்கள், அவர்களுக்கும் இலங்கையை யாண்ட சிங்கள அரசருக்கு முள்ள சம்பந்தம், முதலிய அரும்பெரும் விஷயங்களை ஆராய்ச்சி முறையில் முதல் இரண்டு அதிகாரங்களிலும் அணிபெறவமைத்துக் கூறியுள்ளார். ஈங்கு நம்மாசிரியர் இலங்கைக்கு ஈழம் என்னும் பெயர் உண்டாதற்குக் காரணங் கற்பித்திருப்பதும், சைவசமய பரமாசாரியருள் ஒருவரான மணிவாசகப் பெருமான் ஞானோபதேசம் பெற்றது இலங்கையிலுள்ள மாந்தை என்னும் மாதோட்டம் என்பதும், அதுவே பெருந்துறை என்பதும், இன்னபல பிற கூற்றுக்களும் கூர்ந்து நோக்கத் தக்கவைகளாம்.

பின்னர் நம்மாசிரியர், யாழ்ப்பாணத்தில் முற்காலத்திலே சேர சோழ பாண்டியரை யொப்ப, அரசு செலுத்தின ஆரிய சக்கரவர்த்திகளைப் பற்றித் தொடர்ச்சியாகக் கூறி, அவர்களுடைய பராக்கிரமத்தையும், காலகதியில் பறங்கிக்காரர் ஒல்லாந்தர் ஆங்கிலேயர் என்னும் அன்னியதேசவாசிகளும் எவ்வாறு இலங்கையையும் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றினார்களென்றும், இம்மூவரில் முன்னைய இருவரும் எவ்வாறு குடிகளைப் பரிபாலித்தனரென்றும் விரித்துக் கூறிச் சரித்திரத்தை முடிக்கின்றனர். இந்நூலகத்து அனேக அரும்பெரும் விஷயங்கள் வரன்முறையாய்க் கூறப்பட்டிருப்பதால் இது யாழ்ப்பாணத்தவர்களுக்கு மாத்திரமன்றித் தமிழ் அறிஞர்கள் யாவர்க்கும் பயன்படுமென்று எண்ணுகின்றோம்.

ஏமாங்கதத் திளவரசன்
ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
செந்தமிழ்க்காதை.
கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

யாப்பிலக்கணம்

[472-வது பக்கத் தொடர்ச்சி]

ஆசிரியத்துறை, கலித்துறை, வஞ்சித்துறை

முந்திய இதழில் பாவினங்களுள் ஒன்ருகிய துறையில், வெண்செந்துறை, வெண்டுறை என்பனவற்றின் இலக்கணத்தைக் கற்ருேம்; இவ்விதழில் ஆசிரியத்துறை, கலித்துறை, வஞ்சித்துறை என்பவற்றின் இலக்கணத்தைக் கற்போம் :

ஆசிரியத்துறை:-நான்கடிகளைப் பெற்று ஈற்றடிக்கு அயலடி அளவில் குறைந்து வருவதும்; ஈற்றயலடி அளவில் குறைந்து இடை மடக்காய் வருவதும்; அடிகள் இடையிடையே அளவில் குறைந்து வருவதும்; அடிகள் இடையிடையே அளவில் குறைந்து இடைமடக்காய் வருவதும் ஆசிரியத்துறை என்னும் பெயரால் வழங்கப்படும்.

ஓரடியில் இத்தனை சீர்கள் அமைந்திருத்தல் வேண்டும் என்னும் வரையறை யில்லாமையால், எத்தனை சீரேனும் அமைந்து வரலாமெனக் கொள்க.

வரலாறு

"கரைபொரு கான்யாற்றங் கல்லதர்
எம்முள்ளி வருதிர் ஆயின்,
அரையிருள் யாமத் தடுபுலியே
றஞ்சி அகன்று போக,
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வௌவுதல்
அஞ்சுதும் வாரல் ஐயோ!"

(இஃது ஈற்றிற்கு அயலடி குறைந்து வந்த ஆசிரியத் துறை.)

"வண்டுளர் பூந்தார் வளங்கெழு
செம்பூண்சேய் வடிவே போலத்
தண்டளிர்ப் பூம்பிண்டித் தழையேந்தி
மாவினவித் தணந்தோன் யாரே
தண்டளிர்ப் பூம்பிண்டித் தழையேந்தி வந்துநம்
பண்டைப் பதிவினவிப் பாங்குபட
மொழிந்து படர்ந்தோ னன்றே."

(இஃது ஈற்றயலடி குறைந்து, இடை மடக்காய் வந்த ஆசிரியத்துறை. இடைமடக்காய் வருதலாவது இடையில் வந்த அடியோ, அடியின் ஒரு பகுதியோ மீண்டும் மடக்கி வருதலாம். இதனைத் தடித்த எழுத்திலுள்ள அடிகளிற் கவனித்தறிக.)

"கொன்ருர்ந் தமைந்த குருமுகத் தெழில்நிறக்
குருதிக் கோட்டன இருந்தாள் பெருங்கைக்
குன்ருமென அன்ருமெனக் குமுரு நின்றன
கொடுந்தொழில் வேழம் ;
வென்ருர்ந் தமைந்த விளங்கொளி இளம்பிறைத்
துளங்குவா ளிலங்கெயிற் றழலுளைப் பரூஉத்தாள்
அதிரும் வானென எதிரும் கூற்றெனச்
சுழலா நின்றன சுழிக்கண் யாளி;
சென்ருர்ந் தமைந்த சிறுநுதி வள்ளுகிர்ப்
பொறியெருத் தெறுழ்வலிப் புலவுநா றழல்வாய்ப்
புனலாமெனக் கனலாமெனப் புகையா நின்றன
புலிமா னேற்றை ;
என்ருங்கிவை இவையியங்கலின்
எந்திறத்தினி வரல்வேண்டலம்
தனிவரலெனத் தலைவிலக்கலின்
இறுவரை மிசைஎறி குறும்பிடை
இதுவென்னென அதுநோனர்
காவிரவிடைக் களவுளமது
கற்ருே ரோதும் கற்பன்றே."

(இது நான்கடியாய் முதலடியும் மூன்ருமடியும் பதினன்கு சீராய், இரண்டாமடியும் நான்காமடியும் பதினறு சீராய் இடையிடை குறைந்து வந்த ஆசிரியத்துறை. இடையிடைக் குறைந்து வந்தமையை அடிகளை நன்கு உச்சரித்துக் கண்டறிக.)

"இரங்க குயில்முழவா இன்னிசையாழ் தேனு
அரங்கம் அணிபொழிலா ஆடும்போலும் இளவே
அரங்கம் அணிபொழிலா ஆடும் ஆயின் [னில்
மரங்கொல் மணந்தகன்ருர் நெஞ்சமென்
செய்த திளவேனில்."

(இது நான்கடியாய், இடையிடை குறைந்து இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை.)

கலித்துறை:—நெடிலடி நான்கு பெற்று வருவது கலித்துறை அல்லது கலி நிலைத் துறைஎன வழங்கப்படும்.

"பாகொக் குஞ்சொல் பைங்கிளி யோடும் பலபேசி
மாகத் தும்பர் மங்கையர் நாண மலர்கொய்யும்
தோகைக் கொம்பின் அன்னவர்க் கன்னம் நடை [தோற்றுப்
போகக்கண்டு வண்டின மார்க்கும் பொழில்கண்டார்.

குறிப்பு:-இவ்வாறே நெடிலடி நான்குடையதாய், ஒவ்வோரடியிலும் முதலில் உள்ள நான்கு சீர்களும் வெண்டளை பொருந்தப்பெற்று, ஐந்தாவது சீர் **கூவிளங்காய் கருவிளங்காய்** என்னும் வாய்பாடுகளுள் ஒன்ருயமைந்து, இடையில் விளங்காய்ச் சீர்கள் அமையாமல், அடியின் தொடக்கம் நேரசையில் ஆரம்பித்தால், ஓர் அடிமுற்றும் மெய்யெழுத்தை நீக்கி எண்ணப் பதினறெழுத்தும்; நிரையசையில் ஆரம்பித்தால், அங்ஙனம் எண்ணப் பதினேழெழுத்தும் அமையப்பெற்றதாய், ஈற்றடியின் ஈற்றில் பெரும்பாலும் ஏகாரத்தைப்பெற்று முடியும் செய்யுளைக் **கட்டளைக்கலித்துறை** என்னும் பெயரால் வழங்குவர்.

வரலாறு

"பேய்போல் திரிந்து பிணம்போல்
கிடந்திட்ட பிச்சையெல்லாம்
நாய்போ லருந்தி நரிபோ
லுழன்றுநன் மங்கையரைத்
தாய்போல் கருதித் தமர்போ
லனைவர்க்கும் தாழ்மைசொல்லிச்
சேய்போ லிருப்பர்கண் டீருண்மை
ஞானந் தெளிந்தவரே."

வஞ்சித் துறை :—இருசீரடி (குறளடி) நான்கு பெற்று, ஒரு பொருள்மேல் ஒன்ருக அமைந்து வருவது வஞ்சித்துறை எனப்படும்.

வரலாறு

அன்புறு கிளியே
இன்புறு முருகன்
என்புடை வரவே
அன்புட னழையாய்.

(இதுவே ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வரின், வஞ்சித் தாழிசையாமென அறிக.)

கலித்தொகை

[476-வது பக்கத் தொடர்ச்சி]

பாலைக் கலி 13

தலைமகனுல் பிரிவு உணர்த்தப்பட்ட தோழி அவனை நோக்கி, "நீர் முன்னுள் எம்மைப் பாராட்டியவெல்லாம் பொய் என்பதை இப்பொழுதுதான் யான் உணர்ந்தேன். இவ்வகைப்பட்ட போக்கு உமக்கு எவ்வாறு உண்டாயிற்று?" என்று இடித்துரைத்து அவன் செலவு நீங்கக் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

அணைமரு ளின்றுயி லம்பணைத் தடமென்ருேட்
டுணைமல ரெழினீலத் தேந்தெழின் மலருண்கண்
மணமௌவன் முகையன்ன மாவீழ்வா னிரைவெண்
மணநாறு நறுநுதன் மாரிவீ ழிருங்கூந்த [பன்
லலர்முலை யாகத் தகன்ற வல்குற்
சிலநிரை வால்வளைச் செய்யா யோவெனப்
பலபல கட்டுரை பண்டையிற் பாராட்டி
யினிய சொல்லி யின்னுங்குப் பெயர்ப்ப
தினியறிந் தேனது துனியா குதலே

பொருளல்லாற் பொருளுமுண் டோவென யாழநின்
மருளிகொண் மடநோக்க மயக்கப்பட்டயர்த்தாயோ

காதலா ரெவன்செய்ப பொருளில்லா தார்க்கென
வேதிலார் கூறுஞ்சொற் பொருளாக மதித்தாயோ

செம்மையி னிகந்தொரீஇப் பொருள்செய்வார்க் கப்
ளிம்மையு மறுமையும் பகையாவ தறியாயோ [பொரு

அதனல்,

எம்மையும் பொருளாக மதித்தீத்தை நம்முணுங்
கவவுக்கை விடப்பெறும் பொருட்டிறத்
தவவுக்கை விடுத லதுமனும் பொருளே.

(தரவு)

(வரி. 1-9) இன் துயில் - இனிய தூக்கத்தைக் கொள்ளுதற்குத் தகுதியான, அணை மருள் - பஞ்சணையைப் போன்ற, அம் பணை தட மென் தோள்-அழகிய பருத்த பெரிய மென்மையான தோள்களையும், ஏந்து எழில் - மிகுந்த அழகினையுடைய, எழில் நீலத்து - அழகிய நீலோற்பலத்தினது, துணை மலர் - இரண்டாகிய மலர் போலும், மலர் உண் கண்-அகன்ற மையுண்ட கண்களையும், மண மௌவல் - வாசனையையுடைய முல்லையினுடைய, முகை அன்ன - அரும்புகளைப்போன்ற, மா வீழ்- வண்டுகள் விரும்புகின்ற, வான்நிரை வெண்பல்-பெரிதும் ஒழுங்கான வெண்பற்களையும், மணம்நாறு - வாசனை வீசுகின்ற, நறு நுதல் - நறிய நெற்றியினையும், மாரிவீழ் இருங்கூந்தல் - மேகம்போன்ற கரிய கூந்தலினையும், அலர் முலை ஆகத்து - அடிபரந்த முலைகளையுடைய மார்பினையும், அகன்ற அல்குல்-பரந்த அல்குலினையும், சில நிரைவால்வளை-சிலவாகிய வரிசையான வெள்ளிய வளைகளையுமுடைய, செய்யாயோ என - இலக்குமி தேவியே என்று, பலபல கட்டுரை - பலபலவாகிய புனைந்துரைகளால், பண்டையில் பாராட்டி-முன்னே கொண்டாடி, இனிய சொல்லி - இனிமையான வார்த்தைகளைக் கூறி; இன்னுங்கு பெயர்ப்பது அது துனியாகுதல் - எங்களைத் துன்பத்திலே செலுத்துவதாகிய அப்பாராட்டு உனக்கு எம்மிடத்து வெறுப்பாகுதலை, இனி அறிந்தேன் - இப்பொழுதுதான் உணர்ந்தேன்.

நறுநுதல் என்பதில் உள்ள நறு என்பது பிரியா அடைமொழி.

(தாழிசை)

(வரி. 10, 11) பொருள் அல்லால் பொருளும் உண்டோ என - பொருளே அல்லாமல் நன்கு மதிக்கும் பொருளும் வேறு உண்டோ என்று, நின் மருளிகொள் மட நோக்கம்- நினது மயக்கங்கொண்ட அறியாமையையுடைய எண்ணத்தினுல், மயக்கப்பட்டு அயர்த்தாயோ - நீ மயக்கப்பட்டு (எம்மீதுள்ள அன்பை) மறந்தாயோ?

யாழ - அசை. மருளி - இ-பகுதிப்பொருள் விகுதி.

(வரி. 12-13) பொருள் இல்லாதார்க்கு-கையில் செல்வம் இல்லாதவர்க்கு, காதலார் எவன் செய்ப - அவரால் காதலிக்கப்பட்டார் என்ன உதவியைச் செய்வர், என - என்று, ஏதிலார் கூறும் சொல் - அயலார் கூறும் சொற்களை, பொருளாக மதித்தாயோ - உண்மைப் பொருளாக நீ மதித்தாயோ?

(வரி. 14, 15) செம்மையின் இகந்து ஒரீஇ - நன்னெறியினை விட்டு நீங்கி, பொருள் செய்வார்க்கு - பொருள் தேடுவார்க்கு, அப் பொருள் - அந்தப் பொருளானது, இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ- இப்பிறப்பிலும் இனி வரும் பிறப்பிலும் பகையாய் முடிதலை நீ அறியாயோ?

(தனிச் சொல்)

அதனல் - ஆகையால்,

(சுரிதகம்)

(வரி. 17-19) எம்மையும் பொருளாக மதித்தீத்தை- (அப்பொருளையே அன்றி) எம்மையும் பொருளாக மதிப்பாயாக, நம்முள் நாம் - நமக்குள்ளே நாம், கவவு கைவிட - (முயங்கின) முயக்கத்தைக் கைவிடுவதால், பெறும் பொருள் திறத்து - அடையப்பெறும் பொருளினிடத்து, அவவுகை விடுதல் - அவாவை விடுவாயாக, அது மனும் பொருளே - அதுவே நிலைபெறும் பொருளாம்.

மதி என்னும் முன்னிலை ஏவல் மதித்தீத்தை எனத் திரிசொல் ஆயிற்று.

189183

பாலைக் கலி 1[illegible]

பிரிவு உணர்த்திய தலைமகனுக்குத் தோழி அவன் பிரிவால் தலைவி இழப்பன இவை என்பதையும், அவை அவன் பிரிந்துபோய்ப் பெறுவனவற்ருல் திரும்பப் பெறக் கூடியன அல்ல என்பதையும், அவன் அடையவிரும்புவன மனைவியோடிருந்தே நாளும் பெறக் கூடியன என்பதையும் எடுத்துக் கூறியதைக் கூறுவது இச்செய்யுள்.

அரிமா னிடித்தன்ன வஞ்சிலை வல்விற்
புரிநாண் புடையிற் புறங்காண்ட லல்லா
லிணைப்படைத் தானை யரசோ டுறினுங்
கணைத்தொடை நாணுங் கடுந்துடி யார்ப்பி
னெருத்து வலிய வெறுழ்நோக் கிரலை
மருப்பிற் றிரிந்து மறிந்துவீழ் தாடி
யுருத்த கடுஞ்சினத் தோடா மறவர்
பொருள்கொண்டு புண்செயி னல்லதை யன்போ
டருள்புற மாறிய வாரிடை யத்தம்
புரியுநீ புறமாறிப் போக்கெண்ணிப் புதிதீண்டிப்
பெருகிய செல்வத்தாற் பெயர்த்தர லொல்வதோ
செயலையந் தளிரேய்க்கு மெழினலம் மங்கலம்
[illegible]லையா லுணப்பட்டுப் பண்டைநீ ரொழிந்தக்கால்?

பொய்யற்ற கேள்வியாற் புரையோரைப் படர்ந்துநீ
மையற்ற படிவத்தான் மறுத்தர லொல்வதோ
தீங்கதிர் மதியேய்க்குந் திருமுக மம்முகம்
பாம்புசேர் மதிபோலப் பசப்பூர்ந்து தொலைந்தக்கால்?
பின்னிய தொடர்நீவிப் பிறர்நாட்டுப் படர்ந்துநீ
மன்னிய புணர்ச்சியான் மறுத்தர லொல்வதோ
புரியவிழ் நறுநீலம் புரையுண்கண் கலுழ்பானாத்
திரியுமிழ் நெய்யேபோற் றெண்பனி யுறைக்குங்கால்?

எனவாங்கு,

அனையவை போற்றி நினைஇயன நாடிக்காண்
வளமையோ வைகலும் செயலாகு மற்றிவண்
முளைநிரை முறுவலா ராயத்து ளெடுத்தாய்ந்த
விளைமையுந் தருவதோ விறந்த பின்னே?

(தரவு)

(வரி. 1-9) இணை படை தானையோடு-வந்து கூடுதலையுடைய ஆயுதங்களையுடைய சேனையோடு, அரசு உறினும் - அரசர்கள் வந்து போர் செய்யினும், அம்சிலை வல்வில் - அழகிய சிலைமரத்தால் செய்யப்பட்ட வலிய வில்லினது, புரி நாண் - முறுக்குதலையுடைய கயிற்றிலிருந்து எழுந்த, அரிமான் இடித்தன்ன - சிங்கம் கர்ஜித்தாற் போன்ற, புடையின் - ஒலியாலே, புறங்காண்டல் அல்லால் - (அவ்வரசர்களை) முதுகு காண்டலன்றி, கணை தொடை நாணும் - அம்பை (வில்லிலே) தொடுத்தலை நாணும், கடுந் துடி ஆர்ப்பின் - கடிய துடியினது ஆரவாரத்தினையும், எருத்து வலிய - கழுத்து வலிய, எறுழ் நோக்கு இரலை - வலிமையினையுடைய பார்வையினையுடைய கலைமானினது, மருப்பின் திரிந்து - கொம்பு போலத் திரிந்து, மறிந்து வீழ் தாடி-முறுக்குண்டு தாழ்கின்ற தாடியினையும், உருத்த கடுஞ்சினம் - மிக்க கடிய சினத்தினையுமுடைய, ஓடா மறவர்-(வலி) கெடாத மறவர், பொருள்கொண்டு - (வழிப் போவாருடைய) பொருளைப் பறித்துக்கொண்டு, புண் செய்யின் அல்லதை - அவர்க்குக் காயத்தை உண்டாக்குதல் அன்றி, அன்போடு அருள் புறம் மாறிய - அன்போடு அருளும் அவ்விடத்தை விட்டு நீங்கிய, ஆரிடை அத்தம் - (கடத்தற்கு) அரிய இடத்தையுடைய காட்டிலே.

நாணும் மறவர் எனக் கூட்டுக. அல்லதை-வினைத்திரிசொல். அரசோடு என்பதிலுள்ள ஒடு உருபு சேனையோடு எனப் பிரித்துக் கூட்டப்பட்டது.

(தாழிசை)

(வரி. 10-13) எழில் நலம் - (தலைவியின்) அழகுடைய நிறம், செயலை அம் தளிர் எய்க்கும் - அசோக மரத்தின் அழகிய தளிரை ஒக்கும், அந்நலம் - அந்நிறம், பசலையால் உணப்பட்டு - பசலையால் கைக்கொள்ளப்பட்டு, பண்டை நீர் ஒழிந்தக்கால் - பழைய தன்மை நீங்கிய பொழுது, நீ புறம் புரிபு - நீ புறப்பொருளை விரும்பி, மாறி-(அகப்பொருளைக்) கைவிட்டு, போக்கு எண்ணி - போதலைக் கருதிச் சென்று, புதிது ஈண்டி பெருகிய - புதிதாகத் திரண்டு பெருகிய, செல்வத்தால் - செல்வத்தினாலே, பெயர்த்தரல் ஒல்வதோ - திரும்பவும் பெறல் கூடுமோ?

(வரி. 14-17) திருமுகம்-(தலைவியின்) அழகிய முகம், தீம் கதிர் மதி எய்க்கும் - இனிய கிரணங்களையுடைய சந்திரனை யொக்கும், அம்முகம் - அம்முகமானது, பாம்பு சேர் மதிபோல - பாம்பால் விழுங்கப்பட்ட சந்திரனைப்போல, பசப்பு ஊர்ந்து தொலைந்தக்கால் - பசப்புப் பரந்து கெட்டபொழுது, புரையோரை படர்ந்து நீ - பெரியோரை யடைந்து நீ கற்ற, பொய்யற்ற கேள்வியால்-பொய்யற்ற நூற்கேள்வியாலும், மை அற்ற படிவத்தால் - குற்றமற்ற விரதத்தாலும், மறுத்தரல் ஒல்வதோ-(முன்னைய பொலிவைத்) திரும்பவும் மீட்டல் கூடுமோ?

(வரி. 18-21) புரி அவிழ் - முறுக்கு அவிழ்ந்த, நறு நீலம் புரை உண் கண் - வாசனையுள்ள நீலோற்பலத்தை யொக்கும் மையுண்ட கண்கள், கலுழ்பு ஆனா - அழுது இடைவிடாமல், திரி உமிழ் நெய்யேபோல் - (எரிகின்ற) திரி கக்கிய நெய்யைப் போல, தெண் பனி உறைக்குங்கால் - தெளிவான நீரைத் துளிக்கும்பொழுது (நீங்கும் கண் பொலிவை), பின்னிய தொடர் நீவி-உன்னைப் பிணித்த ஆசையாகிய சங்கிலியினின்றும் விலகி, பிறர் நாட்டு படர்ந்து-பிறர் நாட்டிடத்தே சென்று, நீ மன்னிய புணர்ச்சியால் - நீ (கூடிய) நிலைபெற்ற (தத்துவ ஞானத்தின்) சேர்க்கையாலே, மறுத்தரல் ஒல்வதோ - மறுபடியும் மீட்கக் கூடுமோ?

(தனிச் சொல்)

எனவாங்கு—அசை.

(சுரிதகம்)

(வரி. 23-26) அனையவை-(யான் சொன்ன) அவ்விஷயங்களை, போற்றி-பாதுகாத்து, நினைஇயன - ஆராய்ந்து தேடுகின்றவற்றை, நாடி காண்-ஆராய்ந்து பார், வளமையோ - (அக்கல்வியால் உண்டாகும்) வளப்பமோ, வைகலும் செயலாகும் - (இவ்விடத்திலிருந்தே) நாடோறும் செய்துகொள்ளுதல் கூடும், முளை நிரை முறுவலார் ஆயத்துள்-நாணல் முளையை யொத்த வரிசையான பற்களையுடைய பெண்கள் கூட்டத்துள்ளே, எடுத்து ஆய்ந்த இவள் இளமையும் - உயர்வாக எடுத்து ஆராய்ந்த இவளது இளமைப் பருவமும், இறந்த பின் -கெட்ட பின்பு, தருவதோ - தருவதொன்றோ?

வளமையோ - ஓ இழிவுசிறப்பு. இளமையும் - உம் உயர்வு சிறப்பு. தருவதோ - ஓ எதிர்மறை.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[465-வது பக்கத் தொடர்ச்சி]

உண்மை யுணர்ந்தோ வோக்க நடித்தார்.

அலக்கணுற்ற இலக்குவன் எது பகரினும் அதற்கெலாம் இராமன் எதிர்எதிர் பகர்ந்து அம்மாயப்பொய் மானினைத் தொடர்தலே கடனென நின்றனன். ஆதலின், மூத்தோனை இம் முயற்சியினின்று விலக்குதற்கு வகையொன்றுங் காண்கிலனாகி, உயங்குந் தன் உணர்வெல்லா மொருமுகப்படுத்தி,

அடுத்தவு மெண்ணிச் செய்த
லண்ணலே யமைதி யன்றோ
விடுத்திதன் பின்னின் றார்கள்
பலருள ரெனினும் வில்லால்
தொடுத்தவெம் பகழி தூவித்
தொடர்ந்தனென் விரைந்து சென்று
படுக்குவெ னதுவன் றாயிற்
பற்றினென் கொணர்வெ னென்றான்

[அண்ணலே,செய்ய வேண்டிய காரியமாயினும் அதனை நன்கு ஆலோசித்துப் பிறகு செய்யப்புகுவதன்றோ தக்கதாகும். (ஒன்று சொல்கின்றேன், கேள்) இந்த மானை முன்னே அனுப்பிப் பின்னே நிற்பவர் பலராயிருப்பினும், நான் என் வில்லிலிருந்து தொடுக்கப்படும் கொடிய அம்புகளை எய்துகொண்டு தொடர்ந்துசென்று கொல்வேன்; அவ்வாறு கொல்லாவிட்டால் இம்மானைப் பிடித்துக் கொணர்வேன்—என்றான்]

இளையோன் இயம்பிய இதனில் இழுக்கொன்றும் இல்லையேபோல் தோன்றினும், இதனுட் பொதிந்த பொருளினைச் சீதைதான் இமைப்பொழுதில் உய்த்துணர்ந்துவிட்டாள். ஆதலின்,

ஆயிடை யன்ன மன்னா ளமுதுகுத் தனைய செய்ய
வாயிடை மழலை யின்சொற் கிளியினிற் குழறிமாழ்கி
நாயக நீயே பற்றி நல்கலை போலு மென்னாச்
சேயரிக் குவளை முத்தஞ் சிந்துபு சிதறிப் போனாள்

[அப்பொது அன்னம் போன்ற சீதை, அமிருதம் சொரிவதற்கு நிகராகத் தன் சிவந்த வாயில் இனிய மழலைச் சொற்கள் கிளிபோல் குழறும்படி வருந்தி, 'நாயகனே, நீயே அம்மானைப் பிடித்துக் கொடுக்கமாட்டாய் போலும்' என்று, சிவந்த இரேகைகளையுடைய குவளை மலர்போன்ற கண்களினின்று முத்துக்கள்போன்ற துளிகளைச் சிந்தியவண்ணமாய் அவ்விடம் விட்டகன்றாள்]

அன்னமன்னாள் அவ்வகை யுரைத்தலும் இராமனும் இலக்குவன்றன் குறிப்பின் கள்ளம் யாதெனத் தேர்ந்தனன் ஆனான்போலும்—

போனவள் புலவி நோக்கிப்
புரவலன் பொலன்கொ டாராய்
மானிது நானே பற்றி
வல்லையின் வருவ னென்றே
கானியன் மயிலன் னாளைக்
காத்தனை யிருத்தி யென்னா
வேனுகு சரமும் வில்லும்
வாங்கினன் விரைய லுற்றான்.

[அவ்வாறு அகன்ற சீதையின் புலவியைப் பார்த்து இராமன், இலக்குவனை நோக்கி, "அழகுடைய மாலையை அணிந்தவனே, இந்த மானை நானே பிடித்துக்கொண்டு விரைவில் வருகின்றேன். நீ, வனத்திலுள்ள மயில்போன்ற இச்சீதையை நன்றாகக் காத்திரு" என்று கூறி, வேலும் விளங்கும் அம்புகளும் வில்லும் எடுத்துக்கொண்டு விரைவதாயினான்]

இறுதியிலும் உறுதியை உரைக்காமல் நிற்கவாற்றா இளையவன் மீண்டும்,

முன்னமு மகவாய் வந்த மூவரி னொருவன் போனா
னன்னமா ரீச னென்றே யயிர்த்தனெ னிதனை யைய
இன்னமுங் காண்டி வாழி யேயெனா விருகைகூப்பிப்
பொன்னனாள் புக்க சாலை காத்தனன் புறத்து நின்றே

[முன்னே விசுவாமித்திரன் செய்த யாகத்தினிடையே வந்த தாடகை சுபாகு மாரீசன் என்ற மூவரில் ஒருவன் இறவாமல் தப்பிப் போனான்; அந்த மாரீசனே இந்த மான் ஆகும் என்று சந்தேகிக்கின்றேன். ஐயனே, இதன் மேலேனும் இதன் உண்மையை நீயே கண்டுகொள். அல்லது போவாயாயின் போ, வாழ்க நீ" என்று தன் இரு கரங்களையுங் குவித்துத் தொழுது திருமகள் போன்ற சீதை சென்றடைந்த பர்ணசாலையை வெளியில் நின்று காத்திருந்தான்]

கையறு நிலையை யுற்ற தம்பியோ கரங்கள் கூப்பித் தொழுவதல்லால் இனிச் சொல்வதற்கு யாதுமில்லை; வரம்பறு அன்பினோடும் வாழ்த்தினான். சீதையோடு உட்சென்று தங்கவும் எண்ணாகிப் புறத்து நின்றே காத்தானேனும், பின்னர் அப்பொன்னனாள் வாய் நின்று பாய்ந்து தாக்கும் வன்சொற்கே இலக்காக இலக்குவன் காத்துநின்றான் எனும்வகை முடிந்ததன்றே.

மந்திரத் திளையோன் சொன்ன
வாய்மொழி மனத்துக் கொள்ளான்
சந்திரற் குவமை சான்ற
வதனத்தாள் சலத்தை நோக்கிச்
சிந்துரப் பவளச் செவ்வாய்
முறுவலன் சிகரச் செவ்விச்
சுந்தரத் தோளி னானும்
மானினைத் தொடர லுற்றான்.

[மலையின் சிகரங்கள் போன்ற தன்மை வாய்ந்த அழகிய தோள்களையுடைய இராமன், நல்ல ஆலோசனையுள்ள தன் தம்பி சொன்ன வார்த்தைகளை மனத்திற் கொள்ளாதவனாய், சந்திரன் போன்ற முகத்தையுடைய சீதை புலந்து சென்றதையே நோக்கி, குங்குமமும் பவளமும் போன்ற வாயில் புன்சிரிப்புடையவனாகி அந்த மானினைத் தொடரலானான்.]

இராமன் எடுத்திருக்கும் அவதாரத்தின் நோக்கத்திற்கிணங்கத்தான் இளையவன் உரைத்த மந்திரத்தை மனத்துள் கொள்ளலாகாது. கொண்டக்கால் அரக்கரோ அழிவாரல்லர். மற்றுச் சீதையின் புலவியே நோக்கிப் புன்முறுவல் புரிந்தசெய்தி எற்றுக்கோ? அவள் மடமை நோக்கி இம் முறுவல் பிறந்ததெனலாகாது. மும்மையு மறிந்த இராமபிரானுக்கு மாத்திரம் இம் மான்வேட்டையின் விளைவு யாவதாமெனும் உண்மை தெரிந்து பிராட்டிக்குத் தெரியாதிருந்ததெனின், இனி அவள் வஞ்சவல் லரக்கன் கைப்பட்டுப் படவிருக்கும் இடரையே கருதி யிவன் இரங்கியிருத்தலன்றோ இயற்கை.

சிறிதிதனைச் சோதித்தல் வேண்டும். சீதை வேண்டுவது மான். எனின், இலக்குவன் அதனைப் பற்றித் தந்தாலென், மற்று இராமன் பற்றித்தந்தால் அவளுக்கு என்? இலக்குவன் உரைத்தவை கொண்டு அம்மான் மாயமே என நினைத்தனளாயின், இருவரில் எவரையும் அதன்பின் ஏகாவண்ணந் தடுத்து அது தனக்கு வேண்டாவென விடுத்திருக்க வேண்டும் இவள். அவ்வாறின்றி அஃதோர் கைதவம் யாதுமில்லாக் கலையே என்று, (இலக்குவன் கிடக்க) இவள் இன்னும் நினைத்தவளாயின், அவ்வொரு மானைப் பற்றிக்கொணர்தற் கிவ் விளையோன் ஆற்றல் போதாதென மதித்தா, "நாயக நீயே பற்றி நல்கலை போலும்" என்னாப் புலந்து போயினாள் சானகி? கொழுந்தனது திறமையை இத்துணைக் குறைபட அவள் கருதியிருந்தனளெனக் கொள்ளல் நேரிதன்று. இராமனையே இம் மானின்பின் போக்கவேண்டு மெனுங் குறிப்புடையவளாகத் தோன்றுகின்றாள். பிரிநிலை ஏகாரம் உளதே யொழிய அதற்குக் காரணங் கூறினாளல்லள். மற்று, மானின் மெய்ம்மையிலும் இலக்குவன் மொய்ம்பிலும் அவளுக்கு ஐயமில்லை என்னின், இராமனையே போக்குதற்கு அவள், கூறாமல் விட்ட காரணம் யாவதா யிருத்தல் கூடும்?

இங்குக் காணத்தகுங் காரணம் யாதுமின்றி இராமனை வற்புறுத்தி விலக்கியதோடு, பின்னர்த் தன்னைக்

காத்து நின்ற இலக்குவனையும், "என்னையல் நிற்றியோ இளையோய் ஒரு நீ" என்றும், "நின்ற நின்னிலை நெறியிற் றன்று" என்றும் கண்ணோட்டஞ் சிறிதுமின்றி அகற்றியதையும் ஒருங்குசேர்த்துச் சிந்திக்குங்கால் சீதைதான், விளைவெலாம் ஓர்ந்து, இராவணன் தன்னைக் கவர்ந்து செல்லும்வண்ணம் தக்கஓர் செவ்வி யளிக்குமாறு தமியளாதற்கே தலைநின்றாள் என்று கருதினுலும் அது சீதையின் செம்மையைச் சால அயிர்த்தபடி ஆகவேண்டா. பிற்றைநாள் இவள் இராவணற்கெதிர் தன் நாயகனது வெல்லவொண்ணாத் தனிப்பேராற்றலைப்பற்றிப் பகரும் வீரவாதங்கள் நிசமாயின், அவன்தான் ஒரு மாயமானினல் உயிரிடருற்று உலைந்தனன் என்ன வெருவி, இளையோன் இயம்பிய வாய்மைக்கும் இணங்காமல், தகவலமொழிந்து அவனை அற்றம் செய்ததது அழகன்று. சிலம்புகள் சிலம்பிடை செறித்தகழலோடும், கடங்கலுழ் தடங்களிறு கைபொடி கைதெற்று வடங்கொள நுடங்குமிடையாளாய அத்தாடகையின் உரமுருவி மரமுருவி மலையுருவி மண்ணுருவிப் பாயுமாறு சுடுசரம் எய்ததும், பிஞ்ஞகன் பிடித்த பெருவில்லை,தனக்குச் சூட்டிட நீட்டும் எடவிழ் மாலை என எளிதிலொடித்து இறுத்ததும், பொல்லாத சீற்றத்துக் கொலை மழுவாளவன் இழுக்கமுறச் செய்ததும், வீரவிராதனை வீழ்த்தியதும், கரனைமுதல் தூடணை திரிசிராதியரை எதிர்த்து அவர்தம் அரக்கர்பெருங்கடல் வறள வில்லொன்றிற் கடிகை மூன்றில் உம்பர் ஏற்றியதும் யாவும் அறிந்திருந்தவோர் சீதை, இன்று, இலக்குவன் தேற்றியுந் தேருமல், அவ்விராமனுக்குச் சிலர் இறுதி செய்கின்றனரென அலமந்தாளெனின், அது அன்பின் மிகுதியால் விளையுமொரு அந்தகச் செய்தியல்லாக்கால் கபடநாடகக் காட்சியின் சூழ்ச்சியே யாதல்வேண்டுமெனும் ஐயத்திற் கெல்லை காண்பதரிது. இலக்குவனைப் பின்னர்ச் சினந்து போக்கியது நாடகமாயின், முன்னர் இராமனை இவள் புலந்து போக்கியதும் நாடகமாகலாம். இலங்கையர் கோனுக்கும் இக்கண்ணையிற் காரிகைக்கும் இடையே மறைவில் நிகழ்ந்திருந்தவோர் சங்கேதப்படி இவை யாவும் நிகழ்ந்தனவோ வென்று, புலைசருக்குஏதுவாய் நிற்பவரே கனவிலேனும் நினைக்கத் துணிவார்; அதுவோவன்று சரதம். மற்று—

கருங்கடற் பள்ளியில் கலவி நீங்கிப் பிரிந்த வத்திருமகளே கூடியுள்ளாதலின், பேசுதல்யாதும் வேண்டாமலே, மாயவல்லரக்கர் வாழ்வினை முடிப்பதற்கே மண்ணிடை அவதரித்தருளியுள தனது நாயகன்றன் கருமத்தை முறைபடநன்கறிந்து அன்னதற் குதவியாகத் தன்னை இராவணன்செய்யநின்றஇன்னல்களுக்கு இலக்காக்கிக்கொள்ளவே இவ்வாறெலாம் புலவியுஞ் சீற்றமும் கொண்டனள்போல் நடித்து, கொழுநனையும் கொழுந்தனையும் காவல்கெடக் கடிந் தகற்றினளென நினைத்தற்கும் இடமுளது. "நீயே இம்மானைப் பற்றி நல்குதல் வேண்டும்" என்று இவள் இராமனை வற்புறுத்திய தன்மையை விளக்குதற்கு இக் கொள்கை ஒருவாறு உதவும். தாங்கமாட்டாச் சீற்றமுடையாள்போல் இவள் நடிக்கின்ற திறமையை நோக்கியே இராமன் முறுவல் பூத்த சிந்துரப்பவளச் செவ்வாயின ஞாதலுங் கூடும். விளைவினை ஓர்ந்து செய்யும் விளையாட்டிற்கே இவ்விருவர்தம் செயல்களும் இணங்கியிருக்கின்றன. இலக்குவன் மாத்திரம், பாவம், இந்நாடகத்தினிடையே நிசமேயாக நடக்கின்றான் போலும். அல்லது, அவனும், அறிந்துமே, அறியாதான் போலத் தன்பொறுப்பில் சிறிது நடிக்கின்றானோ, யாரறிவார். கபடநாடகமே இதுவாயின், அது இவர்தம் செய்கைகளின் மிகமிக ஆழத்தினுள் உறைந்து கிடக்கின்ற தென்னலாமேயன்றி இவர்சொற்களோ இக்கருத்திற் கிடந்தரக் காண்டல் அரிதினுமரிதாகி இருக்கின்றது. பின்னர் இராமன், "ஐயன் வல்லன், என் ஆருயிர் வல்லன்" என்று இலக்குவனைத் தன்னகத்தே வியப்பதனைய செய்திகள், தன் கருமத்தை அறியாமலேபோ இராமன் ஆற்றினன் என்று அயிர்க்கும்படி செய்கின்றன. ஆயினும், இராமன் மும்மையு முணர்ந்தே முழுவதும் முடித்தனன் என்பதில் ஐயமில்லையாதலின், அவ் வமைதியிலேயே, சீதையின் இச் செய்கைகளுஞ் சொற்களும் அடங்கும். இலக்குவனும் அடங்கப்படா தென்பதற்கும் யாதோர் காரணமுமில்லை. இப்படியே, தம் நூலினை ஆய்வோர் ஒருபாற்படாமல் ஊசலாடுமுள்ளத்தராய் முடியும்வண்ணம் விடுவது கம்பர் ஷேக்ஸ்பியர் அனைய கவிகளுக்குப் புதுமையன்று.

இவ்வண்ணம், 'நாயக நீயேபற்றி நல்கலைபோலும். என்னக் குறையல்லாக்குறையை நயந்து சீதை இராமனை மானின்பின் போக்கியது உள்ளுறை உண்மைக்கு இணங்குவதுடன் வெளிப்படநடிக்கும் நாடகத்திற்கும் பொருந்துவதா யிருத்தல்வேண்டும். காரணமும் பயனுமின்றி இச்சித்தபடியெல்லாம் ஆட்டிவைப்பதற்கவாவுமொரு மூர்க்கம்பெண்பாலியற்கையென்றும், அதற்கொக்கச் சீதையிங்கிவ்வாறுவற்புறுத்தினளென்றும் அமைதி காணுமாற்றால் மாதரைப்பழிப்பதற் கொருவரும் விரையவேண்டா. மாதரார் அத்தகையினரென்னற் காதாரமில்லை; இருப்பினும், பொதுவற நின்ற சீதையை அப் பழியினுள் தள்ளுவதுந் தகாது. எனின், இவ்வுரையின்கண் நாடகப் பொருத்தமும் எவ்வகை நாடிக் காணற் கூடும்? இதற்கு விடைகூற முயலுமுன் வான்மீகாது வரலாற்றினுள் நமது சிந்தனையைச் சிறிது செலுத்துதல் வேண்டும். மாயமானைக் கண்ணுற்ற சீதை அதன்பால் தான் கொண்ட அவாவினை வான்மீகத்தினுள் விளம்புமாறு இவ்வாறு—

"இந்த மானுக்கு நேரான அழகுள்ளமானை இதுவரையில் நான் கண்டதேயில்லை. இது சாயலாலும் ஒளியாலும் அழகாலும் ஒப்பற்றது. இரத்தினம் போன்ற பலநிறமான புள்ளிகளையுடைய இவ்வழகான மான் சந்திரன் போன்ற தனது காந்தியால் இக் காடெங்கும் ஒளிரச் செய்கின்றது. என்ன ஆச்சரியம்! என்ன அழகு! என்ன காந்தி! என்ன மதுரமான குரல்! விசித்திரமான தேகத்தையுடைய இம்மான் என்மனத்தை முழுதும் கொள்ளை கொண்டது. உயிருடனே இம்மானைத் தாங்கள் பிடிக்கக் கூடுமானால் மிக்க ஆச்சரியமாயிருக்கும். எல்லாரும்

இதைக் கண்டு வியப்படைவார்கள். இந்த வனவாசம் முடிந்து நாம் நமது இராச்சியத்தை அடைந்துபோது, இம்மான் நமது அந்தப்புரத்திற்கு ஓர் அலங்காரமாக இருக்கும். இதைக்கண்டு நாம் களிப்பதுபோலப் பரதரும் எனது மாமிமார்களும் களிப்பார்களென்பதிற் சந்தேகமில்லை. இம்மானை உயிருடன் பிடிக்கமுடியாதாயின் இதனுடைய தோல்கூட அழகாக இருக்கும். கொல்லப்பட்ட இதனுடைய தங்கநிறமான தோலைத் தருப்பாசனத்தின்மேல் பரப்பி அதன்மேல் தங்களுடன் உட்கார நான் இச்சிக்கின்றேன். தங்கள் தலைவர்களை ஒன்று செய்யவேண்டுமென்று ஏவுவது ஸ்திரீகளுக்குத் தகாது; மரியாதையுமன்று. ஆயினும் நான் இந்த மானின் தேககாந்தியைக்கண்டு மயங்கி இருக்கின்றேன்".

ஆதலின், மானைக்கொன்று அதன் தோலைக் கொணர்ந்தாலும் போதும் என்னும் புந்தியளாயிருந்தனள் அச்சீதை. உயிருடன் பற்றி விளையாடுதற்கு இம்மானைச் சீதைப் பெரிது விரும்பினளென்று இராமனும் அங்கு நினைக்கவில்லை என நம்பலாம். தான் புறப்படுமுன் தன் தம்பியை நோக்கி—

"நானிந்த மானைப்பிடித்தாவது கொன்றாவது கொண்டுவருகின்றேன். லக்ஷ்மணா, இம்மானுடைய தோலின் மேல் சீதை அதிக ஆசை வைத்திருக்கிறாள். ஆதலால் நான் இதைப் பிடிக்கப் போகிறேன். இதன் தோல் மிகவும் அழகானது. அதன் நிமித்தம் இந்த மான் இன்று நாசமடையப் போகின்றது. நான் ஒரே பாணத்தால் இம்மானைக் கொன்று திரும்பி வரும்வரையில் நீ இந்த ஆச்ரமத்தில் சீதையை வெகு சாவதானமாகக் காப்பாற்ற வேண்டும். நான் இதைக் கொன்று இதன் தோலுடன் சீக்கிரம் திரும்புவேன்"

என விளம்பினனெனின், அம்மானினை இராமன் உயிருடன் பற்றிக் கொணர முயலவேண்டுமெனக் கொண்டிருந்த சிந்தனை சிறிதினுஞ் சிறிதே என்பதை உணரலாம். இவ்வெண்ணம் இலக்குவன் சிந்தனைக்கு அயலாகாமையின், தானே செல்வன் என்று அவன் வான்மீகத்தில் தடுத்துரைத்தானலன், உரைத்தனனாயினும் சீதை அதை மறுத்து மிருக்கமாட்டாள். இவள் கண்ணெல்லாம் அதன் தோலின்மீதே இருந்தது. உயிருடன் கொணரப் பெற்றாலும், இரண்டு மூன்று நாள் வைத்து விளையாடிவிட்டுப் பிறகு அதனைக் கொன்று அதன் தங்கநிறமான தோலைத் தருப்பாசனத்தில் பரப்பி இராமனுடன் அதன்மேல் உட்காரும் இச்சையைத் தீர்த்துக்கொள்ளும் வரையில் அவள் உள்ளம் அமைதி யடையாதென்னற்கு ஐயம் பெரிதில்லை.

கம்பருடைய நூலினுள்ளே அம் மான்தோல் யாதும் மதிப்புப் பெற்றதில்லை. அழகியாள் இங்கு அவ்வநகனை நோக்கி, [வல்லை

கொற்றவன் மைந்த மற்றைக் குழைவுடை யுழையை
பற்றினை தருதி யாயிற் பதியிடை யவதி யெய்திப்
பெற்றுழியினிதுண்டாடப் பெறற்கருந்தகைமைத்து

என்று வேண்டுங்கால், விளையாடுதற் கலதாயின் அம்மான் அவளுக்கு வேண்டாமை புலப்படும். இவள் விருப்பிற் கிரங்கி அம்மானினை அன்று உயிருடன் பற்றிக் கொணர்பவன் இராமனே அன்றி இலக்குவன் அல்லன் என்பதை இப்பின்னவன் அதன்பால் வன்மம்வைத்துரைத்த வாசகங்களால் சீதை உணர்ந்தனள். குறிப்பினுல் மட்டுமே கண்டுகொள்ள நிற்பதும் அன்று இது. தானே செல்வன் என்று தடுத்துரைத்த இலக்குவன்,

"தொடுத்தவெம் பகழி தூவித்
தொடர்ந்தனென் விரைந்து சென்று
படுக்குவெ னதுவன் றாயின்
பற்றினென் கொணர்வென்"

எனச் செப்பியவளவில் அம்மானைக் கொல்வதே தன் முதற்கருத்தாக வைத்திருந்ததை மிகமிக மெல்லிய போர்வை கொண்டே மறைத்தான். மற்று, "அது அன்றாயின் பற்றிக் கொணர்வென்" என்றிவன் உரைப்பதில் சற்றேனும் நம்பிக்கை வைப்பதற்கில்லை. "காந்தாரநாட்டுக் கட்டழகி" என்னுங் கதையில் வருகின்ற மன்னன் கஜேந்திரஸிம்மன் என்பான், நரபாலன் தாமோதரன் ஆகிய அவ்விரு பாதகர்களை முதலில், "துரிதமாய்த் தூக்கி லிட்டுவிட்டுப் பிறகு அவர் குற்றத்தைப்பற்றிச் சாவகாசமாய் விசாரிக்கப் புகுந்தது" போலவே, இலக்குவனும் இங்கு இம்மானினை முதலிற் கொன்றபிறகே அது மாயமோ அன்றோ என்று ஆராய நினைத்தனன் என்பதைக் கண்டுகொண்ட சீதை, உயிருடனேயே அதனை வேண்டுகின்றாளாதலின், "நாயக நீயே பற்றி நல்கலை போலும்" என வற்புறுத்தியதில் வியப்பேனும் விபரீதமேனும் யாதும் இல்லையே. எனின், உள்ளுறை உண்மையின் திறம் யாவதாயினும், வெளிப்பட நடிக்கும் நாடகத்திற்கும் சீதைநின்ற இந்நிலை நன்கனம் பொருந்துந் தன்மை பொலிவுறத் தோன்றுகின்றது.

இனி, சீதையை இங்குவிட்டு இராமனோடு அம் மாய மானினைத் தொடர்வோம்—

மிதித்தது மெல்ல மெல்ல
வெறித்தது வெருவி மீதிற்
குதித்தது செவியை நீட்டிக்
குரபத முரத்தைக் கூட்டி
உதித்தெழு மூதை யுள்ள
மென்றிவை யுருவச் செல்லுங்
கதிக்கொரு கல்வி வேறே
காட்டிய தொத்த தன்றே

[அந்த மாயமான் மெல்லமெல்ல அடிவைத்து நடந்தது. பிறகு பயந்து வெறித்தது. பிறகு, மேலே எழுந்து குதித்தது. பிறகு, காதுகளை நெறித்து நீட்டிக்கொண்டு, குளம்புகள் உடைய கால்களை மார்போடு சேர்த்துக் கூட்டிக்கொண்டு பாய்கின்ற விரைவினுல், பெருத்து வீசுகின்ற காற்று, மனம், என்னும் இவை உருவிச் செல்லும் வேகத்திற்குப் புதியதோர் வேகத்தைக் கற்பித்ததை ஒத்தது]

காற்றிற்கும் மனத்திற்கும் இம்மான் தன் வேகத்தால் புதியதோர் கல்வி காட்டிய தென்னின், அதனைத் தொடர்ந்த இராமனோ, தனது வேகத்தால் பழையதோர் உண்மையையே காட்டினனென்பதை,

நீட்டினு னுலக மூன்றும்
நின்றெடுத் தளந்த பாதம்
மீட்டுநா முரைத்தற் கம்மா
வேறுமோ ரண்ட முண்டோ

ஒட்டினன் ஞெடர்ந்த தன்னை
யொழிவற நிறைந்த தன்மை
காட்டினு னன்றி யன்றக்
கடுமையார் கணிக்கற் பாலார்

[வாமனனுய் நின்று திரிவிக்கிரமனுய் எடுத்து உலகம் மூன்றும் அளந்த தன் பாதத்தை நீட்டினன் இராமன். அன்று அவன் அளக்காத அண்டத்தையும் இன்று அளந்துகொள்ள இவ்வாறு நீட்டினன், என்னலாமோ வெனின், அவ்வாறு உரைத்தற்கு வேருேர் அண்டமில்லையே; ஆதலின், தனது வேகத்தால் எங்கும், ஒரே இராமமயமாய்த் தோன்றுதலால், அம் மானைத் தொடர்கின்ற இராமன், தான் எங்கும் நீக்கமற நிறைகின்ற தன்மையைக் காட்டினன் என்பதன்றி, அப்பொழுது அவன் சென்ற வேகத்தின் அளவை மதிக்கக்கூடியவர் யார் இருக்கின்றனர்.]

என வரும் பாசுரத்தில் இனிது காணலாம். இதற்கிடை அம் மாயமானே,

குன்றிடை யிவரு மேகக்
குழுவிடைக் குதிக்குங் கூடச்
சென்றிடி னகலுந் தாழிற்
றீண்டலாந் தகைமைத் தாகும்
நின்றதே போல நீங்கு
நிதிவழி நேய நீட்டு
மன்றலங் கோதை மாதர்
மனமெனப் போயிற் றம்மா

[மலையின்மீது எறும், மேகக்கூட்டங்களின் இடையே குதிக்கும். தொடர்ந்து சென்ருல் அகலும், தாமதித்தால் அருகில்வந்து தொடும்படி நிற்கும். நிற்பதைப்போலவே தோன்றி ஓடிவிடும். இவ்வண்ணமெல்லாம் அம்மானது, பொருளின்பொருட்டுத் தம் ஆசையைத் தருகின்ற வாசனைபொருந்திய அழகிய கூந்தலுடைய விலைமாதர்களுடைய மனம்போல, போயிற்று]

இம்மான் மாயமென்ற செய்தி இப்பொழுது தான் இராமனுக்கு விளங்கியதாம். தம்பியின் முன்னறிவை யுன்னிக் கொண்டாடினனுகி இதனைத்தொடர்ந்து வீணே வருந்திய தேனென வருந்தினன். அதன் மேல்,

பற்று வானினி யல்லன் பகழியாற்
செற்று வானிற் செலுத்தலுற் ருெனென
மற்ற மாயவ ரக்கன்ம னக்கொளா
உற்ற வேகத்தி னும்பரி னேங்கினன்

[இனித் தன்னை இராமன் பிடிக்கமுயல்வான் அல்லன். அம்பினுல் தன்னைக்கொன்று வானுலகிற்கு எற்றக்தினன் என்பதை அம் மாய அரக்கன் மனத்திற்கொண்டு மிக்க வேகமுடன் வானத்தில் எழும்பினன்]

அக்க ணத்தினி லையனும் வெய்யதன்
சக்க ரத்திற் றகைவரி தாயதோர்
செக்கர் மேனிப் பகழி செலுத்தினன்
புக்க தேயம்புக் கின்னுயிர் போக்கென

[அந்த நிமிடத்திலேயே இராமனும் தன் சக்கிராயுதம் போன்று தடுப்பதற்கரிய சிவந்த நிறமுடைய ஓர் அம்பை, "இம்மான் போகுமிடம் போய் அதன் இனிய உயிரை நீக்கக்கடவாய்" என்று கட்டளையிட்டு எய்தான்]

நெட்டி லைச்சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட தப்பொழு தேபகு வாயினல்
அட்ட திக்கினு மப்புற மும்புக
விட்ட ழைத்தொரு குன்றென வீழ்ந்தனன்

[நீண்ட அலகுடைய அந்த அம்பானது, மாரீசனுடைய வஞ்சனையுடைய நெஞ்சில் அழுந்தித் தைத்தது. அப்பொழுது மாரீசன் பிளந்த தன் வாயினுல், எட்டுத்திக்கினும் அதற்கப்பாலும் எட்டும்படி வாய்விட்டுக் கூப்பிட்டு, ஒரு மலைபோல் விழுந்தான்]

என்னவென் றழைத்தானென்பது இங்குக் கூறப்படவில்லையாயினும், இராமனது குரலேகொண்டு கூவினனென்பது பின்வரும் செய்யுளாலும், "ஹா ஸீதா, லக்ஷ்மணு" என்பன அவன் சொற்களென்பது வான்மீகத்தாலும் அறியக்கிடக்கின்றன. இறுதியில் இவ்வொரு வஞ்சனை செய்திலன் எனின், சீதையைத் தனிவிட்டு இலக்குவன் பிரிவதும், அவள் இராவணனுக்கு இலக்காவதும் நேர்தற்கியலாது. தனக்கு இலாபமில்லா இதனை மாரீசன் செய்தது ஏனென ஐயுறலாம். தன்னைக் கொன்ற இராமனுக்கு இடுக்கண் விளைத்துப் பழிதீர்க்கவோ, அல்லது, உண்மையில் தன் மருகனுக்கு உதவிபுரியவோ, என்றென்று ஊசலாடும் உள்ளம், மாயுமாறு தன்னை ஏவிய அவ்விராவணனுக்கு முடிவு நாடிப் பழிதீர்க்கவே இது இயற்றினனென்னுஞ் சிந்தனையைப் பற்றி நிற்கின்றது.

இப்பொழுது இம்மானின் பெருமாயம் பின்னும் புலப்பட்ட தென்ன இராகவன்,

வெய்ய வன்ற னுருவொடு வீழ்தலுஞ்
செய்ய தன்றெனச் செப்பிய தம்பியை
ஐயன் வல்லனெ னுருயிர் வல்லனன்
உய்ய வந்தவன் வல்லனென் றுன்னினன்

[கொடிய மாரீசன் தன் அரக்கவடிவத்தோடு விழுந்தவுடன், இது செவ்வியது அன்று என்று சொல்லிய தம்பியை நினைத்து, "என் அப்பன் வல்லவன், என் உயிர் போன்றவன் வல்லவன், என்னை வாழ்விக்க வந்தவன் வல்லவன்" என்று எண்ணினன்.

தன்சொற் கிணங்கினள் கைகேசி என்றறிந்த மந்தரை அவளை, "என் தோழி வல்லள், என்துணை வல்லள்" எனப் பாராட்டிய குரலின் எதிரொலி இங்கு இவ்விராமனது கண்டத்தில் கேட்கின்றது. எனினும், தன் செயலின் விளைவை ஓர்வதன்முன் கூனி பாராட்டினள், ஓர்ந்தபின் பாராட்டினன் இராமன். இதற்கிடையில், அலக்கணுற்றதுபோல் அழைத்த தன் குரல்கேட்டுச் சீதையோ அயர்வெய்துவாள் எனக் கவன்றனனேனும்,

மாற்ற மின்னது மாயமா ரீசனென்
றேற்ற முன்னுணர்ந் தானெனி னென்னுடை
ஆற்ற றேரு மறிவின னுதலால்
தேற்று மாலிளை யோனெனத் தேறினன்

[இலக்குவன், மானைக் கண்டவுடன் அது மாய மாரீசன் என்று முன் உணர்ந்தானுதலாலும், எனது ஆற்றலை அறிந்த அறிவுடையனுதலாலும், இந்த மாரீசனது வார்த்தைகள் கேட்ட சீதை வருந்தாவண்ணம் தேற்றுவான் என்று தேறினன்]

மாள்வ தேபொரு ளாகவந் தானலன்
சூழ்வ தோர்பொரு ளுண்டிவன் சொல்லினல்
மூள்வ தேத மதுமுடி யாமுனம்
மீள்வ தேநல னென்றவன் மீண்டனன்

[இந்த மாரீசன் தான் இறந்துபோகவேண்டுமென்பதே காரியமாகக் கருதி வந்திருக்கமாட்டான். வேறு ஏதோ வஞ்சனை சூழ்ந்தவன் ஆதல்வேண்டும். இவன் கூப்பிட்ட குரலினுல் விளையக்கூடிய தீமை விளைவதற்கு முன்னமே திரும்பிப்போவதே நல்லது, என்று இராமன் மீள்வானுயினன்]

திரும்பும் வழியில் இராமன், "மற்றொரு மானைக் கொன்று அதன் மாமிசத்தைக் கையில் எடுத்துக் கொண்டு ஜனஸ்த்தானத்தை நோக்கி வெகு வேகமாகச் சென்ருன்" என்பார் வான்மீக முனிவர். விதிபிடித் துந்த இராமனதுவழியில்வந்தஇப்பேதைமான் எதற்குப் பலியாயிற்றென்பது விளங்கவில்லை. உரைகாரர்களும் இதனைத்தெளிதற்கு உதவி செய்தாரல்லர். மானின் உருவேகொண்டு மாரீசன் மாயஞ்செய்தான் என்றசீற்றத்தால், இராமன், தன் பேருடை அப்பரசுராமன் ஒரு க்ஷத்திரியன் செய்ததீமையின்பொருட்டு எல்லாக்ஷத்திரியர்களையும்கொல்லப்புகுந்ததேபோல், கண்டமான்களை யெல்லாங் கொல்லத்தலைப்பட்டான் என்னலாமோவெனின், கொன்று வீழ்த்தியதோடமையாமல்அதன் ஊனையுங் கையிற்கொண்டுநடந்தது இக்கருத்திற் கிடையூருய் நிற்கின்றது. மற்று, தான் தொடர்ந்துசென்றமான், அரக்கர் மாயமன்று எனக் காட்டி இளையோன் ஐயத்தைப்பொய்யாக்கத்தானே பொய்க்கரி கொண்டேகினன் போலும் இராமன் என வம்பியம்ப லடுக்காது. வேட்டைக்குச் சென்ற வீரன் வெறுங்கையுடன் மீளலாகாதெனும் மரபு ஏதேனும் உளதோ யாதோ! கம்பர் இவ்வம்பைக் கூருமல் விட்டது கோடி பெறும்.

மாரீசன் வதைப்படலம் முற்றிற்று.

1933-வது வருடத்திய வால்யூம் 6. அட்டவணை

[ஜனவரி முதல்—ஜூன் வரையில்]

தலையங்கம்.

இதழ்.			பக்கம்.
1	கலாநிலயம் ...		... 1
2	சொன்னல் விரோதம்	1	... 21
3	" ...	2	... 41
4	" ...	3	... 61
5	" ...	4	... 81
6	" ...	5	... 101
7	" ...	6	... 121
8	" ...	7	... 141
9	" ...	8	... 161
10	" ...	9	... 181
11	" ...	10	... 201
12	விற்பதற்கே வேண்டும் விலை	1	... 221
13	" ...	2	... 241
14	" ...	3	... 261
15	" ...	4	... 281
16	சமயச் சாந்தி	1	... 301
17	" ...	2	... 321
18	" ...	3	... 341
19	" ...	4	... 361
20	புடவைப் பூசல் ...		... 381
21	அரைக்கோழியும் முழுப்பிள்ளையும்		... 401
22	கள்வரே நல்லோர் போலும்	1	... 421
23	" ...	2	... 441
24	நான் நானே ...		... 461
25	கலாநிலயம் ...		... 481

கம்பராமாயணம்—ஆரணிய காண்டம்.

7. மாரீசன் வதைப்படலம்.

1	விதியே யல்லால் வேறொன் றுளதோ ...	6
2	இடமுங் காலமும் இராவணற் கென்செயும்	36
4	அறியாத் துறக்கமு மறிந்த நிரயமும் ...	73
5	இராவண மியற்றிய விராவண னியம்புவான்	91
6	உள்ள வுணர்வினைப் பேணு வச்சையர் ...	110
8	தவமிலார் சிறுமையைத் தண்மதி காட்டும்	150
9	கற்றவ னுயபின் கேட்கையுங் கடனே ...	175
11	தங்கையின் சொற்களே தந்தவோ ருருவம்	203
12	பாராத வுருவெளியாற் பழித்தனள்காணிராவணனை ...	232
13	ஆய தனைத்து மேழைய னுனேன் ..	243
16	பொய்யினைக் காக்கும் புந்தியு முளதோ ...	313
17	அச்சம்விட்டரக்கனு மறத்தினு லுயர்ந்தான்	334
18	தீயதன் தீமை காணு னரக்கன் ...	349
20	கயவரு முயரிய கழறற் கூடுமோ ...	383
22	தன்னலத் தறமெலாந் தவறி விட்டதே ...	423

இதழ்.		பக்கம்
23	வசையுற வந்தொரு வானும் வளர்ந்ததால்	450
24	துண்ணிய வுண்மையை வெண்மையினுவல்வார் ...	463
25	உண்மை யுணர்ந்தோ ரொக்க நடித்தார் ...	492

தமிழ்ப்பாடம்.

நளவெண்பா—கலிநீங்கு காண்டம்

செய்யுள்.			
1	1- 2:-	...	3
2	3-11:-	வேற்றுமைத்தொடர், உதாரணங்கள்	23
3	12-16:-	எழுத்து-ஒலி ...	43
4	17-19:-	எழுத்து-உயிர், மெய், உயிர்மெய். மாத்திரை ...	68
5	20-22:-	...	86
6	23-27:-	எழுத்து:-மாத்திரை-அளபெடை	103
7	28-30:-	" -மாத்திரை-ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம்	129
8	31-34:-	" -குற்றியலுகரம் ...	145
9	35-37:-	" -குற்றியலுகரம் ...	163
10	38-40:-	" -குற்றியலுகரம், வன்றொடர், மென்றொடர், இடைத்தொடர், உயிர்த்தொடர், ஆய்தத்தொடர், நெடிற்றொடர். ...	183
11	41-43:-	...	205
12	44-46:-	" -குற்றியலிகரம் ...	234
13	47-49:-	தொடரிலக்கணம் ...	253
14	50-53:-	...	271
15	54-57:-	-தொகா நிலைத்தொடர் ...	291
16	58-60:-	" " ...	303
17	61-64:-	...	329
18	65-67:-	வேற்றுமைத் தொகை	343
19	68-71:-	வினைத்தொகை ...	370
20	72-75:-	பண்புத்தொகை ...	388
21	76-78:-	இருபெயரொட்டுப் பண்புத்தொகை ...	409
22	79-83:-	உம்மைத்தொகை, உவமத்தொகை ...	425
23	84-87:-	அன்மொழித்தொகை ...	447
24	88-91:-	அன்மொழித் தொகை-ஆகுபெயர் ...	466
25	92-95:-	" ...	483

அப்பர்.

அப்பரும் அறுபத்து நான்கு கலைகளும்-30. வியாகரணம்

இதழ்.		பக்கம்.
1	அப்பரும் எழுத்ததிகாரமும்	17
3	எழுத்தியலின் பிரணவ தத்துவ விளக்கம்	48
4	அப்பருந் தமிழ்நெடுங்கணக்கும்	71
5	எழுத்துக்களின் பிறப்பு-பவணந்தி உணரா அடிப்படை	88
6	தமிழெழுத்து உற்பத்தியும் அப்பரும்	106
7	” ”	123
8	அப்பருங் குற்றியலிகரமும்	143
9	அப்பருங் குற்றியலுகரமும்	165
10	குற்றியலுகரத்தி னளவும் வேறுபாடும்	192
11	” ”	207
12	குற்றியலுகரப் புணர்நிலை	223
13	” ”	247
14	அப்பரும் முற்றிய லுகரமும்	270
15	முற்றுகர வோசையும் பொருள் வேறுபாடும்	289
16	அப்பரும் உயிரளபெடையும்	312
18	அப்பரும் சுட்டெழுத்தும்	348
19	” ”	363
21	அப்பரும் 'தும்' என்னும் பெயரும்	406
22	அப்பரும் சொல்லதிகாரமும் - திணையும் பாலும்	433

நம்மாழ்வார் வைபவம்.

				செய்யுள்.	
1	4-ம் பத்து, 4-ம் தசகம்.		மண்ணை	1- 2	16
2	”	”	”	3- 7	27
3	”	”	”	8-11	50
4	”	5 ”	வீற்றிருந்து	1- 3	67
5	”	”	”	4- 7	85
6	”	”	”	8-11	108
7	”	6 ”	தீர்ப்பாரை	1- 4	128
8	”	”	”	5-11	147
9	”	7 ”	சீலமில்லா	1- 5	168
10	”	”	”	6-11	186
11	”	8 ”	ஏறுளும்	1- 4	208
12	”	”	”	5- 7	226
13	”	”	”	8-11	249
14	”	8 ”	நண்ணுதார்	1- 5	266
15	”	”	”	6- 8	295
16	”	”	”	9-11	305
17	”	10 ”	ஒன்றும்	1- 7	332
18	”	”	”	8-11	352
19	5-ம் பத்து, 1-ம் தசகம்.		கையார்	1	373
20	”	”	”	2- 6	392
21	”	”	”	7-11	403
22	”	2 ”	பொலிக	1- 6	429
23	”	”	”	7-11	445
24	”	3 ”	மாசறு சோதி	1- 6	469
25	”	”	”	7-11	485

பொதிகை நிகண்டு.

இரண்டாம் பாகம்.

இதழ்.		பக்கம்.
2	அ	29
3	”	52
4	ஆ	76
5	இ	93
6	ஈ	114
7	உ	134
8	ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ	154
9	க	173
10	”	193
11	கா, கி	216
13	கீ, கு	255
15	கூ, கெ, கே, கை, கொ, கோ	286
17	ச, சா	331
19	சி, சீ, சு	369
20	சூ, செ, சே, சொ, சோ	391
21	ஞகரவர்க்கம், த, தா	412
22	தி, தீ, து	435
23	தூ, தெ, தே, தை, தொ, தோ	446
25	நகரவர்க்கம்	487

யாப்பிலக்கணம்.

1	அசை, சீர்	13
2	தளை	34
3	அடி	54
4	தொடை	66
5	தொடை-மோனை, எதுகை	94
6	தொடை விகற்பம்	112
7	ஓசை	135
9	செய்யுள்-வெண்பா	174
10	” ”	194
11	” ”	215
12	” ஆசிரியப்பா	237
14	” கலிப்பா	273
15	” ”	287
16	” ”	314
17	” ”	327
18	” ”	353
19	” ”	366
20	” வஞ்சிப்பா, மருட்பா	385
22	” பாவினம்-குறள்தாழிசை, வெண்டாழிசை	434
23	” ஆசிரியத்தாழிசை, கலித்தாழிசை, வஞ்சித்தாழிசை	449
24	” வெண் செந்துறை, வெண்டுறை	471
25	” ஆசிரியத்துறை, கலித்துறை, வஞ்சித்துறை	490

காற்றுமழை.

(Shakespeare's Tempest)

1 2	முன்னுரை, அங்கம் 1. களம் 1.	15, 32
3, 4, 5, 7, 9, 10, 12, 15, 14, 19, 20, 21	அங்கம் 1. களம் 2.	51, 75, 90 131, 169, 195, 229, 275, 293, 311, 375, 394, 407.
22, 23, 24	அங்கம் 2. களம் 1.	431, 443, 472

தேவகி—ஓர் நாவல்.

1—21 5, 31, 46, 65, 83, 105, 132, 148, 166, 187, 209, 224, 244, 264, 288, 307, 323, 345, 367, 386, 404.

கலித்தொகை.

பாலைக்கலி.

1	முன்னுரை, கடவுள்வாழ்த்து -	ஆறறியந்தணர்	10
2	பாலைக்கலி 1 ”	தொடங்கற்கட் டோன்றிய	25
3	” 2 ”	அறனின்றி யயறூற்று	49
5	” 3 ”	வலிமுன்பின் வல்லென்ற	84
6	” 4 ”	பாஅ வஞ்செவிப்	115
8	” 5 ”	மரையா மரஅல்கவர	154
9	” 6 ”	வேனிலுழந்த வறிதுயங்	172
10	” 7 ”	நடுவிகந் தொரீஇ	189
11	” 8 ”	எறித்தரு கதிர்தாங்கி	214
23	” 9 ”	வறியவ னிளமைபோல்	453
	” 10 ”	அறிதாய வறனெய்தி	454
24	” 11 ”	இடுமுணெடுவேலி	474
	” 12 ”	செருமிகு சினவேந்தன்	475
25	” 13 ”	அணைமரு ளின்றுயில்	491
	” 14 ”	அரிமா னிடித்தன்ன	491

வாழி தோழி—ஓர் கார் நாடகம்.

1	அங்கம் 1. களம் 1.	8
2	” ” 2, 3, 4, 5	28
3	” 2 ” 1, 2, 3	45
4	” 3 ” 1, 2.	63

திருக்குறள் நீதி.

8	பொருட்பால் - அங்கஇயல்	152
13, 14	பொருட்பால் - ஒழிபியல்	256, 267
16	காமத்துப்பால் - களவியல்	315
20, 21	” - கற்பியல்	395, 414

ஞானதீபம்.

இதழ்.	பக்கம்.
21, 22, 23, 24	415, 427, 455, 468

வில்லிபாரத விளக்கம்.

சபாபருவம்—சூதுபோர்ச் சருக்கம்

7, 10, 12, 14 124, 190, 230, 263

பிற விடயங்கள்.

3	ஞான மொழிகள்	56
5	அலங்கோல வெண்பா	96
6, 7	கதிரை மலைக்காதல்	116, 126
7	பொருளீட்டல்	136
9	வீரகத்தி விநாயகர் திருவூஞ்சல்	171
11, 12, 13, 17, 18, 19	வாலிவதை	211, 227, 250, 326, 355, 371.
13	சோம்பல்	246
14, 15	நான் கண்டவுலகம்	268, 283
16	கனவு-ஓர் கதை	309
17	நவாலி அட்டகிரி மாலை	335
18, 19, 20, 21	தமிழ்நாட்டு இராஜ இரத்தினங்கள்	344, 364, 390, 408.
22	வாழ்வு	436
25	மதிப்புரை-யாழ்ப்பாணச் சரித்திரம்	488

1928, 1930, 1931, 1932 வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன. வேண்டுவோர் உடனே வரவழைத்துக்கொள்வது நலம். ஆப்லெதர் கில்ட் பைண்ட் வால்யூம் ஒன்றிற்கு விலை ரூபா 9-0-0. இரயில்வே பார்ஸல் அல்லது தபால் செலவு வேறு.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :
பாதாமி லேகியம் ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம் 2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம் 2-0-0
குழந்தைகளுக்கு
ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை 0-4-0
பால சஞ்சீவினி 0-4-0
பால ஸுதா (டானிக்) 1-0-0



தைலங்கள் :
சந்தனாதி 6 அவுன்ஸ் ரூ. 1-0-0
அமிர்தாமலக ” 0-12-0
பிருங்காமலக ” 0-12-0
ஸ்திரீகளுக்கு
ஸுதக டானிக் 2-0-0
கர்ப்பாசய டானிக் 2-0-0
ப்ரஸவ லேகியம் 1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
"நஞ்சன்கூடு பல்பொடி"
I.D.L. பிருங்காமலக தைலம்
கோரோஜனை மாத்திரை
I.D.L. 61. மெடிகேடட் டப்பி
(ரிஜிஸ்தர் செய்துள்ளது)
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராசம் சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்டாலகஸ்
ஜ்வரேக்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆறெழுத்தந்தாதி:—அகத்திய முனிவர் அருளிச் செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளை யவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணா 12. தபால் செலவு வேறு.

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலா நிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed
During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000
received in proposals.

Life Assurance is security { for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI,
Branch Secretary,
113, Armenian Street,
Madras.
OR
R. G. DAS & Co.,
Managers.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta

For Terms & Conditions apply to:—

T. ANANTACHARI,
Branch Secretary,
113, Armenian Street,
Madras.
OR
R. G. DAS & Co.,
Managers.